Deviyin KANMANI -Tamil Fortnightly AUGUST - 15, 2010 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி...



**குறிஞ்சிப் பூக்கள் எங்கும் பூக்கும்**

'பாசத்துக்கான மனஏக்கம், நேசம் நிறைந்த மனிதர்களால் மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது என்பதை விவரிக்கும் ராஜேஷ்குமாரின் இந்த நாவல் அபூர்வமான வாசம் நிறைந்த குறிஞ்சிப்பூ.'


இப்படிக்கு
ராஜேஷ்குமார்



**மற்றுமொரு மாலை நேரம்**

'வெற்றியை எட்டிப்பிடிக்க இன்றைய இளம் தலைமுறையினர் எத்தகைய சவால்களையும் எதிர் கொண்டு போராடும் தன்னம்பிக்கை கொண்டவர்கள் என்பதை விவரிக்கிறது.'

இப்படிக்கு
வி.உஷா



# குறிஞ்சிப் பூக்கள் எங்கும் பூக்கும்

குளிரில் உறைந்து போன கொடைக்கானல் காலை ஏழுமணி.

நவ்ராஜ் ஹோட்டலின் பின்புறம் குடில் மாதிரி அமைந்த காட்டேஜின் உள்ளே - வெதுவெதுப்பான ஹீட்டரின் உஷ்ணத்தை அனுபவித்தபடி போர்வைக்குள் சுருண்டிருந்தான் ஜெக்தீஷ்.

''என்னங்க..''

விருட்டென்று போர்வை பறிக்கப்பட, சிரமமாய் கண்விழித்து எழுந்து உட்கார்ந்தான். கோபம் மேலிடப்பார்த்தான்.

எதிரே கல்பகா சிரித்தபடி நின்றிருந்தாள். அந்நேரத்துக்கே குளித்திருந்தாள். தலையை அழுத்தமாய் வாரிப் பின்னி நேற்றிரவே வாங்கி வைத்திருந்த மல்லிகைப் பந்தை கும்மென்று மணக்கும்படி வைத்திருந்தாள். நெருப்பு சுடர்விடுகிற மாதிரி ஒரு குங்குமப் பொட்டு நெற்றியின் மையத்தில் உட்கார்ந்திருந்தது. ஆகாய நிறத்தில் போட்டோ பிரிண்டட் ஸாரியும் - அதே நிறத்தில் ப்ளவுசும் உடம்பில் ஏறியிருந்தது.

''ம்.. எந்திரிங்க.. இன்னுமா தூக்கம்..? கொடைக்கானலுக்கு தூங்க வந்தீங்களா..? குறிஞ்சிப்பூ பார்க்க வந்தீங்களா..?''

''கல்பு.. கல்பு.. இன்னும் பத்தே நிமிஷம்.. ஒரு குட்டித் தூக்கம் போட்டுடறேன்.. ரெண்டு கண்ணும் பாய்லர் கரியாட்டம் ஜிவு ஜிவுன்னு எரியுது.. ப்ளீஸ்..''

''ஸாரி மைடியர் ஹஸ்பெண்ட்...'' அவனுடைய அடர்த்தியான கிராப்பை கொத்தோடு சேர்த்துப் பிடித்தாள் கல்பகா. ''இப்படியே நேரா பாத்ரூம் போறீங்க, உங்க பிரஷ்மேல பேஸ்ட் ஏற்கனவே பிதுக்கி வெச்சாச்சு.. பல்லைத் தேய்ச்சுட்டு ஹாய்யா வெந்நீரில் குளிச்சுட்டு வர்றீங்க.. குளிச்சுட்டு வர்றதுக்குள்ளே உங்க ஷபாரி ட்ரஸ் டேபிள் மேல ரெடியா இருக்கும்..''

''கல்பு.. ப்ளீஸ் அஞ்சே நிமிஷம்.. ஒரு மினி தூக்கம்..

''ஊ.. ஹூ.. ம்... என் சோம்பேறிக் கணவனே..!''

சொல்லிக் கொண்டே அவனுடைய தோள்பட்டையைப் பிடித்து எழுப்பிவிட்டாள் கல்பகா.

''சே! அருமையான தூக்கம்...''

''ராத்திரிக்கு வந்து மறுபடியும் தூங்குவீங்களாம்... வாங்க..''

''நீ குளிச்சிட்டியா கல்பு..?''

''ஆறு மணிக்கே..!''

''தர்சனா..?''

''உங்க பொண்ணு உங்க மாதிரி ஒண்ணும் சோம்பேறியில்லை.. அந்த அஞ்சு வயசுக் குழந்தை எனக்கு முன்னாடியே எந்திரிச்சுட்டா... மொதல்ல அவதான் குளிச்சா..''

''எங்கே காணோம் அவளை..?''

''காட்டேஜ் வாசப்படியில உட்கார்ந்துகிட்டு - தூரத்தில தெரியற மலையையும் - நகர்ற மேகங்களையும் பார்த்திட்டிருக்கா..''

''ஹீட்டர் போட்டிருக்கிறப்பவே இந்தக் குளிர் குளிருது.. குழந்தையை எப்படி வெளியில விட்டே?''

''அவ கேட்டாத்தானே.. உங்களுக்கு சாமர்த்தியம் இருந்தா அவகிட்ட பேசி உள்ளே கூட்டிட்டு வாங்க பார்க்கலாம்.''

உள்ளங்கைகளை ஒன்றோடு ஒன்று வைத்து தேய்த்துக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு வெளியே போனான் ஜெக்தீஷ்.

வெளியே காத்திருந்த குளிர் ஒரு ஐஸ் போர்வையாய் அவன் மேல் வந்து விழ - ஜெக்தீஷ் ஒரு சில விநாடிகள் ஒடுங்கிப் போனான்.

காட்டேஜ் வாசல்படித் திட்டில் - கால்களைத் தொங்கப்போட்டபடி உட்கார்ந்து பார்வையை எங்கோ போட்டிருந்தாள் தர்சனா. ரோஜா நிறத்தில் பிராக் போட்டு ஒரு சின்ன பூ மாதிரி தெரிந்தாள்.

''தர்சனாக்குட்டி..''

## ராஜேஷ்குமார்

தர்சனா படக்கென திரும்பிப் பார்த்தாள். எழாமல் சிரிப்போடு ''இங்கே.. வாப்பா..'' என்றாள். ஜெக்தீஷ் போனான்.

''என்ன தர்சனா பனியில வந்து உட்கார்ந்திட்டே.. உள்ளே எந்திரிச்சு வாம்மா. ஜொரம் வந்துட்டா என்ன பண்றது..?''

''அப்பா.. தூரத்தில் பார்த்தியா. எத்தினி மேகம்..? இந்த மேகமெல்லாம் எங்கிருந்துப்பா வரும்..?''

ஜெக்தீஷ் தொலைவில் தெரிந்த அந்த மேகங்களைப் பார்த்தான். சின்னச்சின்ன பஞ்சுத் துணுக்கு சைஸில் ஏராளமான மேகங்கள் - மலைகளின் சிரசிலும் இடுப்பிலும் உரிமையோடு உட்கார்ந்திருந்தது.

''சொல்லுப்பா. இத்தினி மேகமும் எங்கிருந்து வந்துச்சு..?''

''சாமிகிட்டயிருந்து.''

''என்ன அவகிட்டே போய் அரட்டை அடிச்சுகிட்டு இருக்கீங்க. அவ அங்கேயே உட்கார்ந்திருக்கட்டும், நீங்க வந்து குளிங்க. எட்டு மணிக்கு டூரிஸம் பஸ் வந்துடுமாம் எட்டு மணிக்கு நாம ரெடியா இல்லையானா பஸ்காரன் விட்டுட்டு போயிடுவானாம்..''

''இதோ வர்றேன் வெந்நீர் ரெடியா...''

''எல்லாமே ரெடி, வாங்க..''

கல்பகா தலையை உள்ளே இழுத்துக்கொள்ள ஜெக்தீஷ் போகத் திரும்பினான்.

அதே வினாடி.

''டாடி..''

ஒரு சிறுவனின் ஆர்வமான கத்தல் பக்கவாட்டில் கேட்க - திரும்பினான் ஜெக்தீஷ். எதிர்பக்க காட்டேஜிலிருந்து அந்த ஆறு வயதுச்சிறுவன் ஒரு ரப்பர் பந்தாய் குதித்தோடி வந்து ஜெக்தீஷின் காலைக் கட்டிக்கொண்டான்.

அயர்ந்தான் ஜெக்தீஷ்.

'டாடியா...? டாடி என்றா கூப்பிட்டான் இந்தப்பையன்..?' காலைக் கட்டிக் கொண்ட பையனின் முகத்தை நிமிர்த்தினான் ஜெக்தீஷ்.

கண்களில் நீரோடு சிரித்தான் அந்தச் சிறுவன். பெரிய கண்களில் ஆச்சரியம் தத்தளித்தது. சிவப்பு நிறத்தில் அரை நிக்கரும் -ஸ்வெட்டரும் அணிந்து ஒரு சின்ன சிம்லா ஆப்பிள் மாதிரி இருந்தான். குரலில் ஆர்வம் தெறிக்கக் கேட்டான்.

''இத்தினி நாளும் எங்கே டாடி போயிருந்தே..?''

குரல் கேட்டு - கதவைத் திறந்து எட்டிப்பார்த்த கல்பகா ஜெக்தீஷை ஒரு நம்பாத பார்வை பார்த்து ''யாருங்க.. இந்தப் பையன்'' என்றாள்.



## 2

சென்ற மாதம், எட்டாம்தேதி, ஞாயிற்றுக்கிழமை,

டாக்டர் பிரதாப்சந்திரன் கண்ணாடி முன் டையை இறுக்கி சரிபார்த்துக் கொண்டு திரும்பினார். ரொம்ப கிட்டத்தில் மனைவி சாந்திமதி மெலிதான செண்ட் வாசத்தில் நின்று ஏக்கமாய் கேட்டாள். ''எத்தனை மணிக்கு திரும்புவீங்க..?''

''இப்போ மணி எவ்வளவு சாந்தி?''

''சரியா சொல்லணும்னா பத்து எழு...''

''மீட்டிங் ஒரு மணி நேரந்தான் நடக்கும். பனிரெண்டு மணிக்குள்ளார திரும்பிடுவேன்.. வெட்டிங்டே லஞ்ச் பிரமாதமா பிரிபேர் பண்ணி வை வந்து வெட்றேன்..''

''சை.. இன்னிக்குப் பார்த்து டாக்டர்ஸ் மீட்டிங்கா? சாந்திமதி அலுத்துக் கொள்ள பிரதாப் சந்திரன் சிரித்தார். ''சாந்தி இது அரட்டையடிக்கிற மீட்டிங் இல்லை. உலகை பயமுறுத்தும் எய்ட்ஸ் நோய் தீர்க்க கண்டுபிடிக்கபட்டிருக்கிற மெடிஸின் பத்தி அலசப்போற மீட்டிங். ஸ்டேட்ஸிலிருந்து ரெண்டு டாக்டர்ஸ் வந்திருக்காங்க. அற்புதமான டாக்டர்ஸ்.. ஒரு மணிநேரம் உட்கார்ந்து பேசுனா நிறைய விஷயதானம் கிடைக்கும்.. நான்வரட்டுமா?.. பிரவீண் எங்கே..?''

''பக்கத்து பங்களாவுக்கு டி.வி. பார்க்க போயிருக்கான்..''

''ஏன்.. நம்ம. டி.வி. என்னாச்சு?''

''சானல் சரியா கிடைக்கலை... நாளைக் காலையில மெயருக்கு போன் பண்ணனும். இந்த டி.வி. செட்சரியில்லை மாத்தணும்...''

''மாத்திடலாம்..''

சொல்லிக்கொண்டே போர்ட்டிகோவில் நின்றிருந்த தன் புத்தம்

''யோகாசனம் கத்துக்க போன இடத்துல நம்ம தலைவருக்கு பதவி மோகம் தீரலேங்குறதை நிரூபிச்சிட்டாரு''

'எப்படி'

''சிம்மாசனம் கத்துதர முடியுமான்னு கேட்குறாரே''

-ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.



புதிய எஸ்டிபோவுக்கு வந்தார். அவர் பின்னாலேயே வந்தாள் சாந்தி
மதி. சிணுங்கலாய்க் கேட்டாள்.
''சாயந்தரம் எங்கே போறோம்..?''
''அந்த மணிக்கு.. சௌடேஸ்வரி அம்மன் கோவில்..''
''அப்புறம்?''
''சினிமா..?''
''ரிசர்வ் பண்ணிட்டீங்களா..?''
''பண்ணிட்டேன்.. ரஜினியோட புதுப்படம்..''
காரின் இக்னிஷியனை உசுப்பியவர், கண்ணாடிக்கு வெளியே -
சாந்திமதியை உற்றுப் பார்த்தார்.
''என்ன அப்படி பார்க்கறீங்க..''
''இந்த லாரியைக் கட்டிகிட்டு இன்னிக்கு நீ அமர்க்களப் படுத்
தறே..! பார்க்க மூட் கிளம்பிடும் போலிருக்கு..''
''நீங்க மொதல்ல காரைக் கிளப்புங்க.. சரியா பன்னெண்டு
மணிக்கு நீங்க டைனிங் டேபிள்ல இருக்கணும்...''
''ஓ..கே...''
எஸ்டிபோ வை போர்ட்டிகோவில் இருந்து பிரித்து எடுத்துக்
கொண்டு - திறந்திருந்த காம்பௌண்ட் கேட் வழியே வீதிக்குப்
போனார் பிரதாப்சந்திரன்.
பிரதாப்சந்திரனுக்கு முப்பத்தியோரு வயது. வெளிநாட்டு நிறம்.
சுருண்ட முடி. மூக்கு அதி கூர்மை. தாவாக்கட்டையில் விழுந்திருந்த
ஒரு சின்ன பள்ளம் முகத்தின் அழகை மேலும் எடுப்பாக்கிக் காட்டி
யது. சிட்டியிலேயே முதல் தரமான ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்.
மணிக்கட்டைத் திருப்பி வாட்சைப் பார்த்தார் பிரதாப் சந்திரன்,
10.20.
பத்தரை மணிக்கு மீட்டிங் ஆரம்பம். டாக்டர்ஸ் அஸோஷியேச
னின் பிரசிடெண்டான அவர் லேட்டாய் போகலாமா..?
ஆக்ஸிலேட்டரின்மேல் காலை வைத்தார்.
ஆக்ஸிலேட்டரின்மேல் காலை வைத்தார்.
எஸ்டிபோ சிவானந்த நகர் ரோட்டில் விர்ரியது. ஞாயிற்றுக்
கிழமை கோவை நகரத்தை வெளிச்சென்று ஆக்கியிருந்தது.
நல்ல வேகத்தில் போய் - டாக்டர் ராஜேந்திரபிரசாத் ரோட்டுக்கு
வந்தபோது.. எதிரே அந்த சின்ன ஊர்வலம் வந்து கொண்டிருந்தது.
''மூடிய மில்லைத் திறக்க, தமிழக அரசே நடவடிக்கை எடு..''
''நாங்களென்ன வீட்டுக்கு ஒரு வீடியோவா கேட்டோம்...
வேலை வேண்டும் என்று தானே கேட்கிறோம்.''
''கார் வேண்டுமென்றா கேட்கிறோம்..?'' வயிற்றுக்கு சோறு
தானே கேட்கிறோம்.?'' ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் ரொப்பிக்
கொண்டு விதவிதமான கோஷங்களோடு வரும் அந்தச் சின்ன ஊர்வ
லத்தை பொருட்படுத்தாமல் காரின் வேகத்தைக் குறைத்து மெல்லக்
கடக்க முயன்றார் பிரதாப்சந்திரன்.



''யார்ரா.. அவன்.. காரை ஓட்றது..? ஊர்வலம் வர்றது கண்ணுக்
குத் தெரியலை..? நிப்பாட்டு.. நிப்பாட்டு..'' எவனோ ஒருவன் ஊர்
வலத்திருலிருந்து கத்த.
காரை சட்டென்று நிறுத்தினார்.
அடுத்த விநாடி ஊர்வலத்தின் வால்பகுதி அவருடைய காரை
மொய்த்துக் கொண்டது.
''என்டா.. பணக்கார பொறம்போக்கு.. உனக்கு எத்தினி நினா
வெட்டு இருந்தா.. காரை நிறுத்தாமே வருவே..?''
''ஸாரி..''
''என்னடா.. ஸாரி..'' காரின் கதவை ஒருத்தன் 'டொம்' என்று
மொத்தினான். இன்னொருத்தன் பின்புறக் கண்ணாடியை சில்லென்று
கல்லால் உடைத்தான்.
டாக்டர் பிரதாப்சந்திரன் காரைவிட்டு பதற்றமாய் இறங்கினார்.
''ப்ளீஸ் காரை ஒன்னும் பண்ணிடாதீங்க... நான்தான் காரை நிறுத்
திட்டேனே..''
''நாங்க சொன்ன பொறவுதானே நிறுத்தினே..!
முன்னாடியே ஏன் நிப்பாட்டலை..?'' சொல்லிக் கொண்டே
காரை எட்டி உதைத்தான் இன்னொரு பரட்டை தலையன்.
பிரதாப்சந்திரன் கோபமானார்.
''ஏய்யா.. நீங்களெல்லாம் மனுஷங்கதானா..? நான்தான் உங்க
கிட்டே மன்னிப்பு கேட்டுக்கிட்டேனே.. அப்புறமும் ஏய்யா இம்சை
பண்றீங்க..''
கும்பலில் ஆக்ரோஷம் பரவியது. '' என்னடா பெரிய மனுஷா
சொன்னே..? எங்களைப் பார்த்தா மனுஷங்க மாதிரி உனக்குத் தெரி
யலையா..? ஆமான்டா... நாங்க மனுஷங்கள் இல்லை.. மிருகங்க
தான்.. மிருகங்க எப்படி நடந்துக்குமோ.. நாங்களும் அப்படியே நடந்
துக்குறோம்.. டேய்.. காரை அடிச்சு நொறுக்குங்கடா..''
வலதுபக்க கண்ணாடிக் கதவு 'கல்லல்' என்ற சத்தத்தோடு சிதற -
தொடர்ந்த அந்த ஆவேசமான கும்பலால் கார் ஏராளமானகற்களால்
நசுங்க ஆரம்பித்தது.
''யூ... ராட்டன்.. ராஸ்கல்ஸ்..''
பிரதாப்சந்திரன் வீறிட்டு கத்திக்கொண்டே, காரைத் தாக்க ஆரம்
பித்த கும்பலைப் பிடித்துத் தள்ள முயன்றார். கைக்கு கிடைத்த இரண்
டொருவரின் கன்னத்தில் ரப் ரப் பென்று அறைந்தார்.
''டேய்.. அடிக்கிறான்.. இன்னும் நாம்ப நம்ம ஆளுங்களை கூப்
பிடுங்கடா.. காரையும் அவனையும் ஒண்ணா சேர்த்து வெச்சு பரலோ
கம் அனுப்புவோம்..''
கொத்தாய் ஒரு கும்பல் பிரதாப் சந்திரனின் மேல் விழுந்தது. அவ
ருடைய உடம்பு தெரிந்த பக்கமெல்லாம் அடித்தார்கள். அடித்துக்
கொண்டே பேசினார்கள்.

''தோழரே.. இவன் யாருன்னு தெரியுதா..!''

''தெரியலையே..''

''பெரிய நாய்க்கன் பாளையத்துல இருக்கே கல்பா மில்ஸ். அந்த மில்லோட எம்.டி.யோட சன்.. பேரு ஜெக்தீஷ். நான் ரொம்பத் தடவை இவனைப் பார்த்திருக்கேன்..''

''மில் எம்.டி.யோட சன்னா.. இவன்..?''

''அதான் இத்தினி திமிரு..''

''டேய்.. இவன் மில்லு மொதலாளியாம்.. ஆளுக்கொண்ணு சேர்த்து போடுங்கடா.. '' எவனோ சொல்ல கும்பலின் ஆவேசம் இன்னமும் அதிகமானது.

பிரதாப் சந்திரனுக்கு இந்த விபரீதம் சட்டென்று புரிய கும்பலில் ரத்தத்தோட நசுங்கிக் கொண்டே கத்தினார்.

''நான் டாக்டர்.. டாக்டர்.. டாக்டர் மில்லு முதலாளியில்லை..''

ஆனால் - ஈனமான அவர் குரல் எடுபடாமலேயே போயிற்று. கும்பலால் தாறுமாறாய் அலைக்கழிக்கப்பட்டு, மூக்கின் சில்லெலும்பு உடைபட்டு ரத்தத்தை சூடாய் வழிய விட்டார். அடிவயிற்றில் விழுந்த குத்துக்கள் நரம்புகளை மரண வலியோடு இழுத்துப்பிடிக்க சரிந்தார்.

''டேய்.. ஆளை காருக்குள்ளார எடுத்துப்போட்டு பெட்ரோலை ஊத்தி கொளுத்துங்கடா. இவனோட சாம்பலை எல்லா மில்லு முதலாளிகளுக்கும் அனுப்பினாத்தான் அவனவன் மில்லை ஒழுங்கா ஓட்டுவான்..''

பிரதாப்சந்திரனை தரதரவென இழுத்துப்போய் காருக்குள் போட்டார்கள். கதவுகளை அறைந்து சாத்தினார்கள். கார் டாங்கில் இருந்த பெட்ரோலை ரப்பர் குழாய் மூலம் வாய் வைத்து உறிஞ்சி - பாட்டிலில் சேகரித்து கார் முழுவதும் தெளித்தார்கள்.

''பத்த வைடா போதும்... போலீஸ் வந்துரப்போவுது...''

ஒருவன் தீக்குச்சியை உரசி வீசினான்.

''முள்ளை முள்ளால் எடுக்கணும்ன்னு எங்க அம்மா சொன்னதை நான் கடைபிடிக்கிறேன்!''

''எப்படி சொல்றே!''

''என் மாமியாரிடம் அதை கடைபிடிக்கப் போகிறேன்.!''

தா.முருகேசன்,
திருத்துறைப் பூண்டி.





பெட்ரோல் வழிந்து கொண்டிருந்த... காரின் மேல் பாப்பில் ஒரு சின்னப் பிழம்போடு தீக்குச்சிப் போய்விழ பெட்ரோல் அதை ஆர்வமாய் விழுங்கி 'ப்ளப்' என்ற சத்தத்தோடு பெரிதாய் எரிய ஆரம்பித்து காரைச் சுருட்டியது. கரும்புகை சுழன்றது

''டேய் ஓடுருங்க. யாரும் நிக்காதீங்க....'' ஊர்வலம் நாலா திசைகளிலும் கலைந்து ஓட... கார் திகுதிகுவென்று உற்சாகமாய் எரிய ஆரம்பித்தது.

போலீசுக்கு எப்படியோ தகவல் போய் 'வீய்ய்ய்ங்... வீய்ய்ய்ங்' என்ற யுத்தகால சைரனோடு ஸ்பாட்டுக்கு வந்த போது டாக்டர் பிரதாப் சந்திரன் தன்னுடைய அழகான மனைவி சாந்திமதியையும், ஐந்து வயது மகன் ப்ரவீனையும் நினைத்துக் கொண்டே ஒரு கரிக்கட்டையாய் மாறி உயிரை விட்டிருந்தார்.

கார் இன்னமும் சக்கர டயர்களில் சோகையாய் எரிந்து கொண்டிருந்தது.

## 3

தன்னுடைய காலைக் கட்டிக் கொண்டு கண்களில் நீரோடு 'டாடி' என்று கூப்பிட்ட அந்த சிறுவனைப் பற்றி மெல்லத் தூக்கினான் ஜெக்தீஷ்.

கல்பகா இன்னமும் கண்களில் நம்பாத தன்மையோடு கணவனை ஏறிட்டாள். 'யாருங்க இந்தப் பையன்...?'

''தெரியலையே...''

''உங்களை அப்பான்னு கூப்பிடறான்...''

''அதான் தெரியலை...''

''என்ன தெரியலை. நான் அந்தப் பையனை விசாரிக்கிறேன்....'' சொல்லிக் கொண்டே கல்பகா அவனை நெருங்கிய அதே நேரம்...

''டேய் ப்ரவீன்...''

எதிர் காட்டேஜிலிருந்து அந்தப் பெண் ஓடிவந்தாள். கழுத்தை மூடிய பழுப்பு நிற உல்லன் ஸ்வெட்டர். பச்சை நிற கிரிம்ப் ஸாரி. உயர்த்திப் போட்ட கொண்டை. உருவி விட்ட சைஸில் நிஜமாகவே ஒரு கொடி மாதிரி இருந்தாள்.

''ப்ரவீன் கம் ஹியர்...''

''மம்மி... டாடி வருவார்... வருவார்ன்னு சொன்னியே.. இதோ வந்துவிட்டார். ஹி... ஈஸ் ஹியர்....' அந்தப் பையன் கூச்சலிட்டான்.

அந்தப் பெண் ஓடி வந்து ஜெக்தீஷின் இடுப்பைக் கட்டிக் கொண்டு நின்றிருந்த ப்ரவீன் தோள்பட்டையைப் பற்றி இழுத்தபடியே ஜெக்தீஷை ஏறிட்டுப் பார்த்து 'ஸாரி...ஸார்..பையன் ரொம்ப தொந்தரவு குடுத்துட்டானா?' கவலையோடு கேட்டாள்.

''நத்திங்... நத்திங்... இவன்... உங்க பையனா...?''

''ஆமா..பேரு ப்ரவீன்.. அவனோட அப்பா மாதிரியே நீங்க இருந்ததினால் ஏமாந்துட்டான்...''

ஜெக்தீஷ் பையனின் கன்னத்தைத் தட்டினான். ''எத்தனையாவது படிக்கிறே ப்ரவீன்...?''

''யூ...கே...ஜி..''

''எந்த ஸ்கூல்...''

''லீலிக்ஸ் கான்வென்ட்....''

''அது எங்கேயிருக்கு...?''ப்ரவீன் ஆச்சர்யமாய் ஜெக்தீஷைப் பார்த்தான். ''என்ன... டாடி... நீதானே நெதமும் என்னை கார்ல கொண்டு போய் விடுவே... கான்வெண்ட்... எங்கேயிருக்குன்னு கேக்கறியே! ஷேம்... ஷேம்...''

பையன் சிரித்தான்.

அந்தப் பெண் அவனை தன் பக்கமாய் இழுத்து அணைத்துக் கொண்டாள். கம்மிப் போன குரலில் சொன்னாள். ''ப்ரவீன்.. அவர் உன்னோட டாடி இல்லை... நம்ம டாடி நாளைக்குத்தான் வருவார்... வா... போலாம்..''

''போ... மம்மி.. நீ எப்பவும் இப்படித்தான் சொல்றே...டாடியை விட்டு நான் வரமாட்டேன்.'' ப்ரவீன் திமிறிக் கொண்டு ஓட முயல அவனை வலுக்கட்டாயமாய் இழுத்துக் கொண்டு தன்னுடைய காட்டேஜை நோக்கிப் போனாள் அந்தப் பெண்.

''டாடி..டாடி''

பிரவீன் திரும்பிப் பார்த்து கத்திக் கொண்டே போனான். கல்பகா பதற்றமாய் வந்து ஜெக்தீஷின் தோளைப் பற்றி கலவரமாய் கேட்டாள். ''என்னங்க... இது... உங்க மாதிரியே பையனோட அப்பா இருக்காராமே.. நம்ப முடியுதா...?''

''இல்லாமே பையன் என்னை அப்பான்னு கூப்பிடுவானா?''

''சரி.. உள்ளே வாங்க... அந்தப் பையன் மறுபடியும் மேல வந்து விழப்போறான்...''

ஜெக்தீஷை இழுத்துக் கொண்டு உள்ளே போனாள் கல்பகா...


''ஏய்.. தர்சனா.. நீயும் எழுந்திரிச்சு உள்ளார வாடி... மலையையும், மேகத்தையும் பார்த்தது போதும்...''

அம்மாவின் அதட்டலுக்குப் பயந்து போன தர்சனா எழுந்து உள்ளே வந்தாள்.

## 4

டூரிஸம் பஸ் அந்த மலைச்சாரலின் பக்கமாய் ஒதுங்கியது. கடைசி சீட்டின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த கைடு கத்தினார்.

''இந்தச் சாரலில் ஏறி மேல் உச்சிக்குப் போனா... குறிஞ்சிப்பூ நிறைய பூத்திருக்கும்.



பஸ் ரெண்டு மணி நேரம் இதே இடத்துல நிக்கும். அதுக்குள்ளே போயிட்டு வரணும்...''

பஸ்ஸில் இருந்த நாற்பது சொச்சம் பேரும் இறங்கிய பின் கடைசியாய் ஜெக்தீஷும், கல்பகாவும், குழந்தை தர்சனாவும் இறங்கினார்கள். தர்சனா ஓடினாள்.

''ஏய் தர்சனா.. கன்னா பின்னான்னு ஓடக்கூடாது. அப்பாவோட கையை பிடிச்சுக்கிட்டுதான் நடக்கணும்...'

''ம்...ம்...''

''குறிஞ்சி எந்த சைட்ல பூத்திருக்குன்னு கைடு சொன்னாருங்க...?''

''அதோ...அந்த சாரலுக்கு மேல் உச்சியில...''

''குறிஞ்சிப் பூ எல்லா இடத்திலேயும் பூக்காதா?''

''அப்படி பூத்துட்டா... இந்த குறிஞ்சிப்பூவை பார்க்க இத்தனை தூரம் யாரும் வரமாட்டாங்களே... கல்பகா....'' பஸ்ஸில் வந்த அத்தனை ஜனமும் சாரலின் அடிவாரத்துக்கு வந்தார்கள். குறிஞ்சிப்பூ சீஸனையொட்டி திடீர்காப்பிக் கடைகள் கான்வாஸ் படுதாவுக்குள் பிறந்திருந்தன. வால்பேரி, ப்ளம்ஸ் ஏராளமான கூடைகளில் காத்திருக்க அதற்கு முன்னால் ஆங்கிலோ இந்தியப் பெண்கள் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''டென் ருபீஸ், டென் ருபீஸ்..''

ஆங்கிலோ இந்தியப் பெண் விலையைச் சொல்ல பழக்காரி வாயிலிருந்த புகையிலைச் சாற்றை புளிச்சென்று பக்க வாட்டில் துப்பிவிட்டு ''நோ...நோ.. பிப்டீன் ருபீஸ்...'' என்றாள்.

நின்றிருந்த நிறைய கார்களில் வெளிநாட்டு ரெஜிஸ்ட்ரேஷன் தெரிந்தது. மதுரையிலிருந்தும் திண்டுக்கல்லிலிருந்தும் வந்திருந்த டூரிஸ்ட் பஸ்கள், ஜன்னல் கம்பிகளில் காயப்போட்ட துணிகளோடு நின்றிருந்தது.

''இன்னிக்கு ரொம்பவும் கூட்டம் போலிருக்கே...!'' கல்பகா ஆச்சர்யமாய் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே வந்தாள்.

''என்னிக்குமே இப்படித்தான் இருக்கும்...''

''தர்சனா... பராக்கு பார்க்காமே முன்னால பார்த்து நட....''

''அம்மா.. ப்ளம்ஸ் வேணும்...'' தர்சனா நின்றாள்...

''வர்றப்ப வாங்கலாம்....''

''இப்பவே வேணும்...''

''ஒதைப்பேன்....''

தர்சனா கண்ணை கசக்க.. ''வாம்மா.. நான் வாங்கித் தர்றேன்....'' ஜெக்தீஷ் கூட்டிப்போய் கை நிறைய ப்ளம்ஸ் வாங்கிக் கொடுத்து, கொஞ்சிக் கொண்டு வந்தான்.

''எல்லாமே...நீங்க தர்ற செல்லம்...''

''உனக்குத்தான் நிறைய செல்லம் குடுத்துட்டேன்...''



''வழியுது நடங்க...''

மலைச்சாரலின் முதுகில் செம்மண் கோணல் மாணலாய் ஓடியிருக்க.. அதைத் தொட்டு ஏற ஆரம்பித்தார்கள். கொடைக்கானலின் ஜில் காற்று சில்லென்று மூக்கு நுனியையும், காது மடல்களையும் ஸ்பரிசித்தது. ஜனங்கள் ஒரு புனிதயாத்திரையை மேற்கொண்ட உணர்வோடு குறிஞ்சிப் பூக்களைப் பார்ப்பதற்காக மேலே ஏறிக் கொண்டிருந்தார்கள்.

தர்சனா ப்ளம்ஸ் பழத்தை கொறித்துக் கொண்டே முன்னால் ஓட பின்னால் கல்பகா, கால்களை சேலை தடுக்கிவிடாமல் இருப்பதற்காக உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஏறினாள். ஜெக்தீஷ் லேசான மூச்சிறைப்போடு பின்னால் தொடர்ந்தான்.

பாதிச் சாரலை சிரமமில்லாமல் கடந்துவிட்ட ஜெக்தீஷ் பாதிக்கு மேல் வந்ததும் ஒரு மண்திட்டைப் பார்த்து உட்கார்ந்தான்.

திரும்பிப் பார்த்த கல்பகா சிரித்தாள்.

''என்ன உட்கார்ந்திட்டீங்க...?''

''முடியலை... மூச்சு வாங்குது...''

''முப்பத்தியோரு வயசிலேயே மூச்சு வாங்குதா உங்களுக்கு..?''

''உன்னோட கழுத்துல என்னிக்கு தாலியைக் கட்டினேனோ.. அன்னிக்கு ஆரம்பிச்ச மூச்சு வாங்கிட்டிருக்கு...''

''வழியுது.. எந்திரிச்சு வாங்க...''

கல்பகாவுக்கு கோபமோ வெட்கமோ வரும்போதெல்லாம் இந்த வழியுது என்கிற வார்த்தை வாயில் வந்துவிடும்.

''ம்...வாங்க... நம்ம கூட பஸ்சில வந்தவங்கஎல்லாம் உச்சிக்கு போயிட்டாங்க. நீங்க என்னடான்னா கிழவன் மாதிரி உட்கார்ந்து உட்கார்ந்து வர்றீங்க....''

ஜெக்தீஷ் கால் மூட்டுகளைப் பிடித்துக் கொண்டே எழுந்தான். மெல்ல நடக்க ஆரம்பித்தான். ஒரு பத்து நிமிஷ நடைக்குப்பின் உச்சியைத் தொட்டான்.

தர்பூசணி பழச்சாறு ஒரு கப்புடன் அரை கரண்டி கடலை மாவு குழைத்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து வெது வெதுப்பான நீரில் முகம் கழுவுங்கள். வாரத்திற்கு மூன்று முறை செய்தால் பளப்பளக்கும் முகம்!

-கி.மஞ்சுளா, திருவாரூர்.



எதிரே பச்சை பெயின்டைக் கொட்டி விட்ட மாதிரி சமவெளி தெரிய அதன் நடுவே ப்ளூ இங்கை உதறிவிட்ட சைஸில் ஏராளமான குறிஞ்சிப்பூக்கள் குப்பென்று கண்களுக்கு சிக்கியது.

''அம்மா...''

வாய் மேல் வலது கையின் மொத்த விரல்களையும் வைத்து ஆச்சர்யப்பட்ட கல்பகா, கணவனைத் திரும்பிப் பார்த்து, ''இங்க பார்த்தீங்களா?'' என்றாள்.

தர்சனா ஓடிப்போய் ஒரு குறிஞ்சிப் பூவை கிள்ளி மூக்கருகே வைத்துப் பார்த்தாள். 'ம்... கொஞ்சங்கூட வாசனையே இல்லை...'

''எப்படிங்க... இவ்வளவு பூ.. ஒரே நேரத்துல...?''

கல்பகா ஆச்சரியப்பட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஒரே நீலநிறக்காடு.

''நிஜமாகவே அற்புதம். இல்லையா கல்கபா...?''

''வாங்க...கொஞ்சம் முன்னாடி போய் பார்க்கலாம்...''

முன்னால் நடந்தார்கள். திட்டுத் திட்டாய் ஜனங்கள் அப்படியப்படியே ஆச்சர்யத்தில் உறைந்து போய் குறிஞ்சிப் பூக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கண்களில் சந்தோஷ லயிப்பு.

''கல்பகா..''

''என்னங்க...?''

''நீயும் தர்சனாவும் முன்னாடி வரைக்கும் போயிட்டு வாங்க.. நான் கீழே பாறைத்திட்டுல கொஞ்ச நேரம் உட்காந்து ரெஸ்ட் எடுத்திட்டிருக்கேன்...''

''வர வர நீங்க ரொம்ப கிழமா ஆயிட்டீங்க. ஊருக்குப் போனதும் முதல் காரியமாக டாக்டர்கிட்டே காட்டி உடம்பை ஓவராயில் பண்ணணும்...''

''பண்ணலாம். நீ மொதல்ல போயிட்டு வா...'' ஜெக்தீஷ் தன்னுடைய முழங்கால்களைப் பிடித்துக் கொண்டே பாறைத் திட்டில் ஏறி உட்கார்ந்தான். மூச்சிரைத்தான்.

கல்பகாவும் தர்சனாவும் கும்பலோடு கலந்து முன்னே போக-தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்த சிகரெட் பெட்டியை உருவிக் கொண்டான் ஜெக்தீஷ். சிகரெட் ஒன்றை உருவி உதட்டுக்குக் கொடுத்த அதே விநாடி.

''டாடி...''

பின் பக்கம் அந்தக் குரல் கேட்க திரும்பினான்.

ப்ரவீன் நின்றிருந்தான்.

உதட்டில் பொருத்தியிருந்த சிகரெட்டை எடுத்து சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டே அந்தப் பையனை ஆச்சர்யமாய் பார்த்தான் ஜெக்தீஷ்.

''டாடி...! மம்மி பின்னாடி வர்றாங்க...''

அவன் கைகாட்டிய பக்கமாய் பார்வையைப் போட்ட ஜெக்தீஷ்



அந்தப் பெண் வேக வேகமாய் வருவதைப் பார்த்ததும் பாறையை விட்டு கீழே இறங்கினான்.

அவள் மூச்சிறைக்க வந்தாள்.

''டேய்... ப்ரவீன்...என்னை ஏன்டா இப்படி படுத்தறே...?''

அவனுடைய காதைப் பற்றி இழுத்து முதுகில் ஒன்று போட முயன்றாள். கண்களில் நீர் தெரிந்தது.

''ப்ளீஸ் பையனை அடிக்காதீங்க...'' அவன் கைகளைக் காட்ட அவள் நிமிர்ந்தாள்.

ஜெக்தீஷ் அவளருகே வந்தான். 'பையன் இப்படி ''டாடி...டாடி''ன்னு உயிரா இருக்கானே.. அவனோட அப்பா வரலையா இங்கே....?''

அந்தப் பெண் புன்னகைத்தாள். சோகம் தோய்ந்த கனமான புன்னகை.

''அவர் வரமாட்டார்...''

''ஏன்..''

''ஹி...ஈஸ்.. நோ மோர்..''

ஜெகதீஷ் கண்களில் அதிர்ந்தான்.

# 5

''என்ன சொல்றீங்க.. பையனோட அப்பா இறந்துட்டாரா?'' ஜெகதீஷின் உதடுகளில் வார்த்தைகள் தடுமாற்றத்தோடு இடறியது.

அவள் விழிகள் நிறைந்த நீரோடு பிரவீனை இழுத்து அணைத்து அவனுடைய கிராப்பை அளைத்த படியே மெல்லிய குரலில் சொன்னாள். ''அவர் இறந்து இன்னைக்கு தேதிக்கு ஆறுமாசமாகுது..''

''எப்படி.. எப்படி.. பை நேச்சர்...? ஆர்... ஆக்ஸிடெண்ட்...?''

''ஒரு வெறி பிடிச்ச கூட்டம்...''

ஜெகதீஷ் புரியாமல் திகைக்க அவள் சொன்னாள். தன்னுடைய பெயரை சாந்திமதி என்று சொன்னாள். கணவன் டாக்டர் பிரதாப் சந்திரன் திருமண நாளன்று ஒரு மீட்டிங் விஷயமாக வெளியே போன சமயம் ஊர்வலத்தினரின் வெறிபிடித்த. செய்கைக்கு பலியான விபரத்தைச் சொன்னாள். சொல்லச் சொல்ல ஏராளமாய் அழுது மூக்கு சிவந்தாள்.

ஜெகதீஷுக்கு சட்டென்று அந்த கொடைக்கானல் வெறுத்து போயிற்று. கொள்ளை அழகோடு பூத்துக் கிடந்த அந்தக் குறிஞ்சிப் பூக்களின் ரம்மியம் மனசில் மடிந்து போயிற்று. பையன் ஒன்றும் புரியாமல் அவளுடைய அணைப்பில் மலங்க மலங்க விழித்துக் கொண்

டுருக்க அவள் அழுது ஓய்ந்து, கையிலிருந்த சின்ன கர்ச்சிப்பால் கண்களை ஒற்றிக் கொண்டிருந்தாள்.

''மிஸஸ் சாந்திமதி...''

ஜெகதீஷ் கூப்பிட அவள் அவனை ஏறிட்டாள்.

''உங்களோட இழப்பு ரொம்பவும் அதிகம்.. நான் என்ன தான் ஆறுதல் சொன்னாலும்.... சொல்லப்படுகிற அந்த வார்த்தைகளெல்லாம் வெறும் சம்பிரதாய வார்த்தைகளாகத்தான் இருக்கும். முன்னே பின்னே பார்த்திருக்காத உங்க ஹஸ்பெண்ட்டோட இழப்பை என்னாலேயே தாங்கிக்க முடியலை... இந்த ஆறுமாசமா நீங்க அந்த இழப்பை மனசுல சுமந்துகிட்டு வளைய வந்திட்டிருக்கிறதை நினைச்சா ஆச்சரியமாயிருக்கு... கோயமுத்தூர்ல நீங்க எங்கேயிருக்கீங்க..?''

''டாடாபேட்.. சுந்தர் நகர்..''

''கொடைக்கானலுக்கு நீங்க மட்டும் தான் வந்தீங்களா...?''

''ஆமா...''

''வீட்ல யாருமே இல்லை.. அவருக்கும் அப்பா அம்மா கிடையாது; எனக்கும் கிடையாது... எனக்கு துணை பிரவீன், பிரவீனுக்கு துணை நான்..''

''கொடைக்கானலுக்கு இப்பத் தான் முதல் தடவையா வர்றீங்களா.. மிஸஸ். சாந்திமதி...?''

''நோ.. இது ரெண்டாவது தடவை.. போன வருஷம் நானும் அவரும் பிரவீனைக் கூட்டிட்டு வந்தோம்... அப்பத்தான் லாட்ஜ் மானேஜர் சொன்னார். அடுத்த வருஷம் தவறாமே வாங்க. குறிஞ்சிப் பூ பூக்கும்னு சொன்னார். பிரவீனோட அப்பாவுக்கு அந்த நிமிஷத்திலிருந்தே குறிஞ்சிப் பூக்களைப் பார்க்கணும்ங்கிற ஆசை. அந்தப் பூ எப்படியிருக்கும்? என்ன கலர்..? வாசனையாயிருக்குமான்னு ஆர்வமா கேட்க ஆரம்பிச்சுட்டார்.. அடுத்த வருஷம் கண்டிப்பா கொடைக்கானல் வந்து குறிஞ்சிப் பூவை பார்ப்போம்னு சொன்னார்.. பட்..



''நேத்து தலைவர் பேசிட்டிருக்கும் போது மழை வந்தும் யாரும் நனையலே...''

''எதனாலே?''

''கூட்டத்தில் யாராவது இருந்தால் தானே...''

கே.பிரசன்னாகுமார்,
குடந்தை



பட்...''

கண்ணீர் காய்ந்து போயிருந்த சாந்திமதியின் கண்களில் மறுபடியும் நீரின் பளபளப்பு எட்டிப் பார்த்தது. கர்ச்சிப்பால் மூக்கைப் பொத்தி உபயோகம் செய்தாள்.

பிறகு அவளே தொடர்ந்தாள்.

''இந்த வருஷம் குறிஞ்சிப் பூ பூத்ததும் எனக்கு அவரோட ஞாபகம் அதிகமாயிடுச்சு.. அதான் புறப்பட்டு வந்தேன்.. ஒரு வாரமா கொடைக்கானல்ல தான் இருக்கேன்...''

சிறிது நேரம் பேசாமல் இருக்க ஜெகதீஷ் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டான்.

''உங்க ஹஸ்பெண்ட் என்னை மாதிரியே இருப்பாரா மிஸஸ் சாந்திமதி...?''

''ஏறக்குறைய உங்க மாதிரிதான்...''

''அவரோட போட்டோ வெச்சிருக்கீங்களா...?''

''வெச்சிருக்கேன்..'' என்றவள் லேசாய் திரும்பி நின்று பிளவுஸின் இடைவெளியில் கையை நுழைத்து அந்த பர்ஸை எடுத்தாள். ஜிப்பைப் பிரித்து பாலிதீன் உறைக்குள் இருந்த சின்ன சைஸ் போட்டோவை உருவி ஜெக்தீஷிடம் நீட்டினாள்.

வாங்கிப் பார்த்த ஜெக்தீஷ் லேசா அயர்ந்தான்.

கிட்டத்தட்ட அவனுடைய முகம். நாசிப்பிரதேசம் கொஞ்சம் வித்யாசத்தை காண்பித்தது. அந்த சதைப் பிடிப்பான கன்னமும் மோவாய் பிரதேசமும் நூற்றுக்கு நூறு அவனுடையதே...! சிவிய கிராப் அமைப்பில் சொற்ப மாறுதல்.

புன்னகை செய்தான் ஜெகதீஷ்.

''எழுபது சதம் என்னை மாதிரி தான் இருக்கார்...''

''நேத்தைக்கு சாயந்தரம் உங்களை நான் ஹோட்டல் மாடியில பார்த்தப்போ அப்படியே அசந்து போய் நின்னுட்டேன்... நல்ல வேளையா பிரவீன் அப்போ உங்களைப் பார்க்கலை.. பார்த்திருந்தா உங்களை கட்டி பிடிச்சிருப்பான்... ஆமா.. உங்களைப் பத்தி ஒண்ணும் சொல்லலையே... நீங்களும் கோயமுத்தூரா...?''

''ஆமா''

''கோயமுத்தூர்ல எங்கே...?''

''ஆர்.ஆர்...லே அவுட்...''

'''ஜாப்'ல இருக்கீங்களா...?''

''நோ.. நோ.. பெரியநாயக்கன் பாளையத்துல கல்பகா மில்ஸ்ன்னு ஒரு மில்.. அந்த மில்லுக்கு எங்க பாதர் எம்.டி... நான் ஜி.எம்..''

ஓ! அவன் பெரிய இடம் என்கிற மாதிரியான ஒரு ஆச்சரியம் சாந்திமதியின் கண்களில் படர்ந்தது.

''உங்க ஒய்ப்பை எங்கே காணோம்...?'' அவள் சுற்றும் முற்றும்

பார்த்துவிட்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

''அதோ.. அங்கே..'' ஜெகதீஷ் தூரத்தில் கைகாட்ட சாந்திமதி திரும்பிப் பார்த்தாள்.

நூறு கெஜதூரத்தில் ஒரு மேட்டின் மேல் நின்றபடி பள்ளத்தாக்கில் பூத்திருந்த குறிஞ்சிக்காட்டைப் பார்த்து வியந்து கொண்டிருந்த கல்பகாவும், தர்சனாவும் அவனுடைய கண்களில் பட்டார்கள்.

''ஒரே பொண்ணுதானா உங்களுக்கு?''

''ஆமா...''

''பேரு?''

''தர்சனா...''

''உங்க மிஸஸ் அழகாயிருக்காங்க.. அவங்க பேர் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''கல்பகா.''

''நைஸ் நேம்...''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் ஜெக்தீஷின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பிரவீன் - மெல்ல நெருங்கி வந்து ஜெக்தீஷின் காலைக் கட்டிக் கொண்டான்.

''டாடி...''

''பிரவீன்.. இவர் நம்ம டாடி இல்லை.. கால் ஹிம் அங்கிள்...''

''நோ.. மா.. இட்ஸ் டாடி...''

''சொன்னா கேக்கணும்.. நம்ம டாடி.. ரெண்டு நாள் கழிச்சு வருவார்..'' அவள் சொல்லச் சொல்ல ஜெக்தீஷ் குறுக்கிட்டான்.

''ரெண்டு நாளைக்கு அவன் போக்கிலேயே விடுங்க மிஸஸ் சாந்திமதி... அப்புறம் அவனே புரிஞ்சுக்குவான்..''

''டாட்.. நம்மளும் அங்கே.போலாமா?'' ஜெக்தீஷ் கையைப் பற்றி இழுத்தான் பிரவீன்.

''டேய் பிரவீன்..'' சாந்திமதி அதட்ட, சிரிப்போடு பாறைத்தட்டிலிருந்து கீழே இறங்கினான் ஜெக்தீஷ்.

''எங்கே போலாம் பிரவீன்?''

''அங்கே...''

''வா.. போலாம்...''

பிரவீன் குதிநடை போட்டுக் கொண்டு ஜெக்தீஷை இழுத்தபடி ஓட - சாந்திமதி கொஞ்சம் அவஸ்தையோடு பின்னால் நடந்தாள்.

''பிரவீன் உங்களுக்கு ரொம்பவும் தொந்தரவு தர்றான்..''

''ஸோ வாட்..? அவனுக்கு என்னால் இந்த சந்தோஷத்தையாவது குடுக்க முடியுதே.. நீங்க ஹெசிடேஷன் இல்லாமே வாங்க...''

''உங்க ஒய்ப் ஏதும் சொல்ல மாட்டாங்களா...?''

''அவ அந்த மாதிரியான ரகம் இல்லை..''

மூன்று பேரும் மெல்ல நடந்து அந்த திட்டை நெருங்கினார்கள். எதற்கோ திரும்பிப் பார்த்து தர்சனா கத்தினாள். ''ஹைய்யா.. அப்பா



வர்றார் அம்மா...''

''என்ன கிழவனாருக்கு மூட்டுவலியெல்லாம் சரியாயிடுச்சா?'' என்று சிரிப்போடு கேட்டுக் கொண்டே திரும்பியவள் சட்டென்று முகம் மாறினாள். ஜெக்தீஷுக்கு இணையாக சாந்திமதி நடந்தபடி பேசி வருவதைப் பார்த்தவள் மனசுக்குள் 'மளுக்'கென்றாள்.

''என்ன கல்பகா.. இந்த ஸ்பாட்ல பூ எப்படியிருக்கு?'' கேட்டுக் கொண்டே நெருங்கிய கணவனை சிரிப்பில்லாமல் பார்த்தாள்.

''நிறைய பூத்திருக்கு'' என்றாள்.

''இவங்க.. சாந்திமதி.. காலையில ஹோட்டல்ல பார்த்தமே அவங்க.. திரும்பவும் அந்தப் பையன் என்னை டாடின்னு சொல்லி ஒட்டிக்கிட்டான்..''

கல்பகா அதே சிரிப்பில்லாத முகத்தோடு சாந்திமதியைப் பார்க்க அவள் சோகமாய் புன்னகைத்து வணக்கம் சொன்னாள்.

''உங்க ஹஸ்பெண்டுக்கு எம் பையனாலே தொந்தரவு..''

''அவங்க அப்பா என்னிக்கு வர்றார்...?''

கல்பகா கறுகறுப்போடு கேட்க -சாந்திமதி ஒன்றும் பேசத் தோன்றாமல் ஜெக்தீஷைப் பார்த்தாள்.

ஜெக்தீஷ் கல்பகாவை நெருங்கி, இறுகிப் போன முகத்தோடு சொன்னான்...''பையனோட அப்பா வர மாட்டார்...''

''ஏன்?''

ஜெக்தீஷ் சொன்னான் சுருக்கமாய்.

கல்பகா கண்களில் கொஞ்சம் போல் அதிர்ந்து கழிவிரக்கமாய் சாந்திமதியைப் பார்த்துக் கொண்டு ''அப்படியா...?'' என்றாள்.

சாந்திமதி பீறிட்டு வந்த கண்ணீரை உதட்டைக் கடித்து அடக்கியபடி தொலை தூரத்தில் தெரிந்த குறிஞ்சிப் பூக்களின் நீலப்பரப்பை பார்த்துக் கொண்டிருந்தாள்.

6

மத்தியானத்துக்கு மேல் காட்டேஜுக்கு திரும்பியதும் கல்பகா ஜெகதீஷிடம் சொன்னாள்.

''கொடைக்கானல் போதுங்க.. புறப்படலாம்...''

ஜெகதீஷ் அதிர்ந்தான்.

''ஏய்... கல்பு என்னாச்சு உனக்கு..?''

''எனக்குப் பிடிக்கலை...''

''கொடைக்கானல் பிடிக்கலையா...?''

''கொடைக்கானல் பிடிச்சது.. உங்க நடவடிக்கை தான் பிடிக்கலை.. உங்க மூட்டு வலிக்கு காரணம் தெரிஞ்சு போச்சு..''

''வாட் யூ மீன்?''

''அந்த சாந்திமதியைப் பார்த்திட்டு தானே பாறைத் திட்டுல ஏறி உட்கார்ந்தீங்க? மூட்டுவலின்னு சால் சாப்பு சொல்லிட்டு அவ வந்த துமே சிரிச்சு பேசிட்டு வந்தீங்க...?''

ஜெகதீஷ் புன்னகைத்தான்.

''சந்தேகமா...?''

''இது சந்தேகமில்லீங்க... முன்னெச்சரிக்கை... அந்தப் பையன் உங்களை டாடி டாடின்னு கூப்பிடறதும், அது செத்துப்போன புருஷ னுக்காக அழறதும் நீங்க குழைஞ்சு குழைஞ்சு பேசறதும் எனக்குப் பிடிக்கலை...''

''கல்பு என்ன இது அர்த்தமில்லாமே பேசறே..? அந்தப் பெண் ணைப் பார்த்தா உனக்கு பரிதாபமா இல்லையா..?''

''பரிதாபப்படலாம்.. ஆனா பக்கத்துல போகக்கூடாதுங்க... என் னைய பொறுத்த வரைக்கும் நீங்க எந்தப் பொண்ணுகிட்டே பேசற தையும் நான் ஏத்துக்க மாட்டேன். எம் மனசுக்கு என்னவோ மாதிரி இருக்கு.. மொதல்ல இந்த கொடைக்கானலை விட்டு போயிடலாம் வாங்க...''

''கல்பு.. உன்னோட பயம் அனாவசியமான பயம்..''

''தப்புங்க.. இந்த பயம் அவசியமான பயம் இன்னும் இரண்டு நாள் நீங்க இந்த கொடைக்கானல்ல இருந்தா அந்த பையனுக்கு நிஜ மாவே நீங்க அப்பா ஆயிடுவீங்க..''

ஜெகதீஷுக்கு லேசாய் கோபம் வந்தது.

''உனக்கு எம்பேர்ல சந்தேகம் வந்துடுச்சு.. அப்படித் தானே...? சரி புறப்படு.. இந்த ஹோட்டல் வேண்டாம்.. வேற ஹோட்டலுக் குப் போயிடுவோம்.. வந்துட்டு சீஸனை என்ஜாய் பண்ணாமே போனா எப்படி..?''

''வேற ஹோட்டலுக்குத் போனா மட்டும் அவங்களுக்குத் தெரி யாதாக்கும்...? பார்த்த வரைக்கும் கொடைக்கானல் போதும் புறப்ப டுங்க..''

''நீ முடிவு பண்ணிட்டே....?''

''ஆமா..''

''சரி. புறப்படறதுக்கு ஏற்பாடு பண்ணு. நான் பில் பிரிபேர் பண் ணச் சொல்லிட்டு வர்றேன்...'' ஜெகதீஷ் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனான்.

என்ன பெண் ஜென்மங்கள்...?

எந்நேரமும் சந்தேகத்தை நிரப்பிக் கொண்ட இருதயங்கள். ச்சே..? மனசுக்குள் கனன்று கொண்டே ஹோட்டல் லாபிக்கு போய், ரிசப் ஷன் கௌண்டரில் இருந்த கொண்டை போட்ட பெண்ணிடம் பில்லை பிரிபேர் பண்ணச் சொல்லி விட்டு ஹோட்டல் வராந்தாவுக்கு வந்தான்.

சாந்திமதி எதிர்பட்டாள்.



கையில் பில்.

சொன்னாள், ''உங்களைப் பார்க்கத் தான் வரலாம்ன்னு...''

''என்ன விஷயம்...?''

''நான் காட்டேஜை காலி பண்ணிட்டேன்.. ஊருக்குப் புறப்பட றேன்...''

ஜெக்தீஷ் துணுக்குற்றான்.

''என்ன திடீர்ன்னு...?''

''உங்களுக்காகத்தான்....''

''எனக்காவா...?''

''ஆமா..நீங்க பேமிலியோடு இந்த கொடைக்கானல் சீஸனை என் ஜாய் பண்ண வந்திருக்கீங்க. அதைப் பாழாக்க வேண்டாமேன்னு தான்...''

''நீங்க சொல்றது எனக்கு புரியலை..''

''உங்களைப் பார்த்ததிலிருந்து பிரவீனுக்கு அவனோட பாதர் ஞாபகம் அதிகமாயிடுச்சு. எந்தநேரமும் உங்களைப் பத்தியே பேச றான். உங்க காட்டேஜுக்கு வர்றதுக்காக துடிக்கிறான். அவனை வச் சுகிட்டு என்னால சமாளிக்க முடியலை.... பிரவீன் உங்களை டாடின்னு கூப்பிடறதை உங்க ஒய்ப் அவ்வளவா விரும்பலைன்னு நினைக்கிறேன்....''

''நோ.. யூ ஆர் ராங்...''

''ஐயாம் கரெக்ட் மிஸ்டர் ஜெக்தீஷ். ஒரு பெண்ணை ஒரு பெண் தான் புரிஞ்சுக்க முடியும். உங்களை என்னோட பையன் டாடின்னு கூப்பிடற அந்த விநாடியில்- அவங்க முகத்துல தெரியற எக்ஸ்பிர ஷனை என்னால படிக்க முடியுது..''

ஜெக்தீஷ் ஒன்றும் பேசத் தோன்றாமல் அவளையே பார்த்தான். அவள் கேட்டாள்.

''நான் புறப்படட்டுமா...?''

''இப்பவேவா...?''

''ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆன உன் கணவனுக்கு நினைவு திரும்பிருச்சாடி!''

''நர்ஸை, பார்த்தால் மட்டும் அடையாளம் தெரியுதுனு சொல்கி றாண்டி!!''

எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி



''ஆமா... அதோ? கார். டிரைவர் லக்கேஜையெல்லாம் டிக்கில வெச்சிட்டிருக்காரே. அந்த கார்தான்...''

''பிரவீன் எங்கே..?''

''அவன் தூங்கிட்டிருக்கான்...''

''இந்நேரத்துக்கேவா...?''

''மூஷ்வலா இந்நேரத்துக்கு அவன் தூங்கமாட்டான் நான் தான் வலுக்கட்டாயமா அவனைத் தூங்க வெச்சிருக்கேன் அரை டம்ளர் பால், பாதி ஸ்லீப்பிங் டேப்லட்...''

''தூக்க மாத்திரை குடுத்தீங்களா..?''

''அவனை அப்படி தூங்க வைக்காட்டி... நான் இந்த கொடைக்கானலை விட்டு போக முடியாது மிஸ்டர் ஜெக்தீஷ். அவன் உங்களைவிட்டு வருவான்னு நீங்க நினைக்கறீங்களா..? கண்டிப்பா முடியாது..''

ஜெக்தீஷ் அயர்ச்சியோடு நிற்க.

சாந்திமதி குரல் தழுதழுத்தான். ''நான் வர்றேன் மிஸ்டர் ஜெக்தீஷ். பிரவீனுக்கு கொஞ்ச நேரமாவது சந்தோஷத்தை குடுத்த உங்களுக்கு என்னோட நன்றி...''

நகர்ந்தாள்.

அவள் காரை நோக்கிப் போவதையே கனத்த நெஞ்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்த ஜெக்தீஷ் அவள் தலை மறைந்ததும் தன் காட்டேஜை நோக்கித் திரும்பினான்.

புடவைகளை மடித்து சூட்கேஸுக்குள் திணித்துக் கொண்டிருந்த கல்பகா உர்ரென்ற முகத்தோடு திரும்பினாள்.

''அவ கூட என்ன பேசிட்டிருந்தீங்க..?''

''பார்த்துட்டியா..?''

''வேணுமின்னே வந்து பார்க்கலை... இந்த ஜன்னலாண்டை நின்னு பார்த்தால்... அந்த வராந்தா பூராவுமே தெரியுது...ம்... சொல்லுங்க.. அவ கூட என்ன பேசிட்டிருந்தீங்க....?''

''அவ... காட்டேஜை காலி பண்ணிட்டு ஊருக்கு போறாளாம்..''

''நிஜமாவா...?'' கல்பகாவின் விழிகளில் மகிழ்ச்சி தெரிந்தது.

''ம்...?''

''ஏனாம்...?''

''நீங்களும் உங்க ஒய்ப்பும் சீஸனை என்ஜாய் பண்ண வந்திருக்கீங்க. இந்த நேரத்துல என்னோட பையன் உங்களை தொந்தரவு படுத்தறதை நான் விரும்பலை... ஸோ.. போறேன்னு கிளம்பிட்டா..''

''அந்த அளவுக்காவது தெரிஞ்சிருக்கே....''

''இப்ப என்ன சொல்றே....? கொடைக்கானல்ல இருக்கலாமா..? ஊருக்கு புறப்படலாமா...?''

''அவதான் புறப்படறாளே.. நாம இருப்போம்... பில் போட சொல்லிட்டீங்களா...?''



''ஆமா..''

''போய் போட வேண்டாம்ன்னு சொல்லுங்க குறிஞ்சி பூக்கிற சீஸனுக்கு வந்துட்டு ஒரு நாள்ல திரும்பி... போறதாவது...?''

ஜெக்தீஷ் மறுபடியும் வெளியே வந்தான்.

எதிர்ப்புற காட்டேஜை கார் டிரைவர் பூட்டிக் கொண்டிருக்க தூங்கிவிட்ட பிரவீனை தோளில் போட்டுக் கொண்டு காரின் பின்சீட்டுக் கதவை திறந்து கொண்டிருந்தாள் சாந்திமதி.

ஜெக்தீஷைப் பார்த்ததும் புன்னகைத்து 'வரேன்' என்பது போல் தலையை ஆட்டி அபிநயித்தபடி பிரவீனை பின்சீட்டில் படுக்க வைத்தாள்.

ஜெக்தீஷின் வயிற்றை இனம் புரியாத ஒரு சங்கடம் பிசைந்தது. இதயத்தின் ஓரங்கள் பிளேடால் கீறிவிட்ட மாதிரி வலித்தது.

## 7

கொடைக்கானலில் ஐந்து நாட்களை தொலைத்து விட்டு, ஊருக்கு திரும்பியிருந்த ஜெக்தீஷின் மனசில் சாந்திமதியும், பிரவீனும் அழுத்தமாய் உறைந்து போயிருந்தார்கள். கல்பகா அவர்களை மறந்து போய் பழைய கலகலப்புக்கு திரும்பியிருந்தாள்.

கொடைக்கானலிருந்து வந்ததுமே ஒரு மணி நேரம் கூட ஓய்வு எடுத்துக் கொள்ளாமல்- உடனே காரை எடுத்துக் கொண்டு மில்லுக்கு கிளம்பினான் ஜெக்தீஷ்.

தன் பிரத்யேக அறைக்குள் புகுந்து கொண்டு கடந்த ஒரு வார வேலையை கவனிக்க முயன்றபோது. மானேஜர் திருமூர்த்தி இன்டர்காமில் கூப்பிட்டார்.

''என்ன விஷயம் திருமூர்த்தி... சொல்லுங்க...''

''உங்க பிரதர்-இன்-லா மிஸ்டர் புருஷோத்தமன் உங்களைப் பார்க்கிறதுக்காக வந்திருக்கார் சார்.... அனுப்பவா?''

''அனுப்புங்க..''

எரிச்சலாய் சொல்லிவிட்டு ரிஸீவரை சாத்தினான் ஜெக்தீஷ். ஆபீஸுக்கு வந்ததுமே முதல் தரிசனம் மகா மோசமான தரிசனம் ஆத்திரத்தோடு முனகினான்.

புருஷோத்தமன் வேறு யாருமில்லை. கல்பகாவின் அண்ணன் தான். மைனர்தனம் பண்ணும் ஒரு ஜாலி பேர்வழி.

''குட்மார்னிங் மாப்ளே...'' புருஷோத்தமன் உள்ளே வந்தான். சென்ட் வாசம் அடிக்கும் ஜிப்பா. சுருள் முடி.

''ம்...ம்... வாங்க..'' என்றான் ஜெக்தீஷ்.

''கொடையிலிருந்து எப்ப வந்தீங்க மாப்பிள்ளை...?''

''இப்பத்தான்...''

''நீங்க ஊர்ல இல்லாதபோது மில்லுக்குள்ளே ஒரு சம்பவம் நடந்துபோச்சு மாப்ளே..''

''என்ன சம்பவம்...?''

பைல் ஒன்றை எடுத்து புரட்டிக் கொண்டே கேட்டான் ஜெக்தீஷ். புருஷோத்தமன் பெருமூச்சை அடைத்தன.

''ஸ்பின்னிங் செக்ஷன்ல நான் சேர்த்து விட்ட ஒரு ஆளை டிஸ்மிஸ் பண்ணிட்டார் மானேஜர்...'' அவன் கோபமாய் சொல்ல ஜெக்தீஷ் அவனை ஏறிட்டுப் பார்க்காமல் பைலின் தாளைத் தள்ளிக் கொண்டே கேட்டான்.

''யாரை....? மருதாசலத்தையா..?''

''ஆமா மாப்ளே...!''

''காரணமில்லாமே மானேஜர் டிஸ்மிஸ் பண்ணியிருக்க மாட்டார்....''

''காரணம் ஒண்ணுமில்லே மாப்ளே.... புல் நைட் ஷிப்ட்ல வெடிகாலை நேரத்துல அசந்து போய் தூங்கிருக்கான் மருதாசலம். அதைப்போய் பெரிசா எடுத்துகிட்டு...''

பட்டென்று இடைமறித்தான் ஜெக்தீஷ். ''தூங்கறவங்களுக்கு இந்த மில்லுல இடமில்லை... மானேஜர் டிஸ்மிஸ் பண்ணினது சரிதான்...''

''மாப்ளே..''

''சோம்பேறிகளுக்கெல்லாம் பரிஞ்சுட்டு வராதீங்க... எனக்கு இன்னிக்கு நிறைய வேலையிருக்கு..''

புருஷோத்தமன் கோபமாய் எழுந்தான். ''நான் சாயந்தரமா உங்களை வீட்ல வந்து பார்க்கிறேன்....''


''ம்...ம்..ம்..''

அவன் வெளியே போக கதவருகே காத்திருந்த ஜெக்தீஷின் பி.ஏ. ஜானகிராமன் உள்ளே வந்தான்.

''குட்மார்னிங் சார்...''

''குட் மார்னிங்... என்ன ஜானகிராமன்...?''

''சார் நீங்க ஒரு வாரம் ஊர்ல இல்லாதபோது உங்களைக் கேட்டு வந்த இன்-கமிங்



உளுந்து வடைக்கு ஊறவைக்கும் போது ஒரு ஆழாக்கு உளுந்துக்கு ஒரு ஸ்பூன் கடலைப்பருப்பு சேர்த்து அரைத்துத்தட்டினால் வடை மொறு மொறுப்பாக இருக்கும்.

-வே.சித்ராவேடிப்பன், திருவண்ணாமலை.



கால்ஸ்...''

நோட்டுபுக்கை பிரித்து அவன் முன்னால் வைத்தார். ஜெக்தீஷ் அதை எடுத்து பார்வையை அதில் ஓட்டினான்.

கடந்த ஒரு வாரகாலமாய் அவன் ஊரில் இல்லாத போது கேட்டு வந்து போன நெம்பர்லாம், பெயர்களும் வரிசையாய் தெரிய பார்வையை அதில் போட்டான் ஜெக்தீஷ்.

பெரும்பாலும் மில் எம்.டீ.ஸ். கால்ஸ்.. ராஜபாளையத்திலிருந்தும், திருப்பூரிலிருந்தும் நான்கைந்து காட்டன் வியாபாரிகள். அப்புறம் கிளப் மெம்பர்ஸ்.

நேற்றைய தேதிக்கு வந்தான்.

கண்களில் லேசாய் ஆச்சர்யம் காட்டினான்.

3236587-சாந்திமதி. காலை 10.30 மத்தியானம் 1.05 சாயந்தரம் 6.15 ஆகிய நேரங்களில் போன் செய்திருந்தாள்.

''ஜானகிராமன்.. இந்த போன் கால்..?''

''யாரோ... தெரியலை சார்... மூணு தரம் டெலிபோன் பண்ணிட்டாங்க... பேர் சாந்திமதி.. நீங்க கொடைக்கானல்லயிருந்து திரும்பிட்டீங்களா.. இல்லையான்னு கேட்டுகிட்டே இருந்தாங்க...''

''என்ன விஷயம்ன்னு நீங்க கேட்கலையா...''

''கேட்டேன் சார்.... அவங்க சொல்லலை...''

''ஓ...கே.. நான் போன் பண்ணி பேசிக்கிறேன்....'' ஜானகிராமன் நகர்ந்து கொள்ள ஜெக்தீஷ் தன் பிரைவேட் போனை தன்னருகே நகர்த்திக் கொண்டான். ரிஸீவரை எடுத்து டயலை சுழற்றினான் த்ரீ..டு த்ரீ...சிக்ஸ்..பைவ்...எய்ட்...ஸெவன்....

மறுமுனையில் ரிங் ஒடியது...

இரண்டு தடவை அடிக்கவிட்டு யாரோ எடுத்தார்கள்.

''ஹலோ...'' என்றார்கள். அது சாந்திமதியின் குரல் தான் ஜெக்தீஷ் சொன்னான்.

''ஹலோ, மிஸஸ் சாந்திமதி, நான் ஜெக்தீஷ் பேசுறேன்....''

''ஓ... நீங்களா.. கொடையிலிருந்து எப்ப வந்தீங்க...?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான்...''

''ஸீஸனை என்ஜாய் பண்ணிங்களா...?''

''ம்...ம்...''

''நேத்தைக்கு உங்களுக்கு மூணு தரம் போன் பண்ணினேன்....''

''என்ன விஷயம் மிஸஸ் சாந்திமதி...?''

''ஒண்ணுமில்லை மிஸ்டர் ஜெக்தீஷ். கொடையிலிருந்து வந்த நாள்லேயிருந்து பிரவீனுக்கு காய்ச்சல், டாடி.... டாடின்னு ஜுர வேகத்துல அனத்திட்டே இருந்தான். நானும் வருவார் வருவார்ன்னு அவனை கன்வின்ஸ் பண்ணிட்டிருந்தேன். நேத்தைக்கு காலையில திடீர்ன்னு டெம்பரேச்சர்.. அதிகமாயிடுச்சு... அதான் நீங்க ஊர்ல இருந்தா..ஒரு அஞ்சு நிமிஷம் அவனை வந்து பார்த்து....''

''பிரவீன் இப்போ எப்படியிருக்கான்...?''

''டெம்பரேச்சர் குறைஞ்சுடுச்சு. பட்... டாடி... டாடின்னு புலம்பல் இன்னும் நிக்கலை... ரொம்பவும் படுத்தறான் என்னை...''

''நான் வரணுமா...?''

'' ஒரு அஞ்சு நிமிஷம் அவனைப் பார்த்துட்டு போயிடறீங்களா...?''

''எப்போ வரணும்...''

''உங்க வேலையைக் கெடுத்துகிட்டு வரவேண்டாம். மிஸ்டர் ஜெக்தீஷ். உங்களுக்கு எப்போ லீசர் டைமோ அப்போவாங்க....''

''உங்க வீட்டு அட்ரஸை இன்னொரு வாட்டி சொல்லுங்க...''

அவள் சொல்ல,

''நான் இப்பவே புறப்பட்டு வர்றேன்...'' என்றபடி எழுந்தான் ஜெக்தீஷ். கார் சாவியை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்து போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கி போனான்.

முக்கியமான பைல்களில் அவசர அவசரமாய் கையெழுத்து வாங்க வந்த பி.ஏ. ஜானகிராமன் திகைத்து நின்றான்.

## 8

டாடா பாட்டில் சுந்தர் நகரைத் தேடிக் கண்டுபிடித்து சாந்திமதியின் வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்தினான் ஜெக்தீஷ்.

வீடு நவீன மோஸ்தரில் ஒரு பங்களா மாதிரி தெரிந்தது. வீட்டின் முன்புறம் ஒரு சில்வர் வுட் மரம்.

மஞ்சள் புஷ்பங்களோடு பூப்பெய்திருந்தது. போர்ட்டிகோவின் முன் பக்க விஸ்தி வாழை தெரிய தோட்டத்துப் புல்வெளியில் சங்கிலியால் கோர்க்கப்பட்ட ஊஞ்சல் ஆடியது.

கார் போர்ட்டிகோவில் போய் நின்றபோது வாசலில் காத்திருந்த சாந்திமதி ஓடி வந்தாள். கொடைக்கானலில் பார்த்ததை விட சற்று மெலிந்த மாதிரி தெரிந்தாள். பெரிய கண்களில் சோகம் அப்பிக் கிடந்தது. அந்த சோகத்திலும் துளி படிந்த கொலுபொம்மை மாதிரி அழகாய் தெரிந்தாள்.


''வாங்க மிஸ்டர் ஜெக்தீஷ்... உங்களுக்கு லீசர் டைம் இருக்கும் போது வரச்சொன்னேன்... நீங்க இப்பவே வந்துட்டீங்களே..?''

''எனக்கு இப்பத்தான் லீசர் டைம்....'' புன்னகைத்துக் கொண்டே காரை விட்டிறங்கினான் ஜெக்தீஷ்.

அவளோடு இணைந்து உள்ளே நடந்தான்.

''வீட்டை, பிரமாதமா வெச்சிருக்கீங்க....''





"அவருக்கு இப்படி சுத்தமா இருந்தாத்தான் பிடிக்கும்..."

முன் ஹாலுக்கு வந்தார்கள்.

"டாக்டர் பிரதாப் சந்திரன் பெரிய சைஸ் போட்டோவில் வாடின ரோஜா மாலையோடு தெரிந்தார். பிரேம் சட்டங்களின் ஓரங்களில் சின்னச் சின்னதாய் சீரியல் பல்புகள் எரிந்தன.

"பிரவீனை டாக்டர் வந்து பார்த்தாரா...?"

"ம்...தினமும் வந்து இஞ்செக்ஷன் பண்ணிட்டு போனார்..."

ஹாலில் மத்தியிலிருந்த அந்த அறைக்குள் நுழைந்தார்கள். ப்ரவீன் உல்லன் போர்வையோடு கட்டிலில் தெரிந்தான். கையில் கிளூப்பை வைத்து அதை சால்வ் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தவன், ஜெக்தீஷைப் பார்த்ததும் போர்வையை விலக்கிக் கொண்டு குபீரென்று எழுந்தான்.

"டாடி "

கட்டிலை விட்டு இறங்கி தளர்வாய் ஓடி வந்து அவனுடைய கழுத்தை எம்பி தாவி கட்டிப் பிடித்துக் கொண்டான். "எங்கே போயிருந்தே டாட். "

" நான் எங்கேயும் போகலையே பக்கத்துல தானே இருந்தேன். "

" நோ டாட் நீ பொய் சொல்றே? "

அவனை அள்ளித் தூக்கிக் கொண்டு கட்டிலை நோக்கி நடந்தான் ஜெக்தீஷ். பிரவீனின் உள்ளங்கைகள் ஜுரவேகத்தில் புறங்கழுத்தில் தீயாய்ச் சுட்டது.

" அம்மாவை ரொம்பவும் படுத்திறயா ப்ரவீன்... 'பேட் பாய்ஸ்'தான் அப்படி பண்ணுவாங்க. நீ தான் குட் பாய் ஆச்சே அம்மா சொன்னபடி கேக்கணும். "

" சரி டாட் "

" டாடியைக் கேட்டு தினமும் தொந்தரவு படுத்தக்கூடாது. நான் வந்தாலும் வரலைன்னாலும் நீ சமத்தா இருக்கணும். "

" சரி டாட் "

" மருந்து சாப்பிட்டியா? "

"என் வீட்டுக்காரருக்கு ராத்திரி மண்டை உடைஞ்சி போச்சு!"

"ஏன் என்னாச்சு?"

"கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன்டி."

பி.கவிதா, சிதம்பரம்





" ம் சாப்பிட்டேனே. கலர் கலரா மூணு மாத்திரை... டாக்டர் மாமா தெனமும் வந்து ஊசி போட்டுட்டு போறாரே " அவன் சொல்ல ஜெக்தீஷ் கன்னத்தை தட்டினான். கட்டிலின் உட்கார்ந்த ப்ரவீன். இனிமே காய்ச்சல் நல்லாயிடும் டாட். "

சாந்திமதி கொஞ்சம் தள்ளி நின்று ஜெக்தீஷின் அப்பா நாடகத்தை கண்களில் நீரோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜெக்தீஷ் அவளைத் திரும்பிப் பார்த்தான். புன்னகையோடு சொன்னான் " நாளைக்கு ப்ரவீன் பள்ளிக்கூடம் போயிடுவான் மிஸஸ் சாந்திமதி. "

கண்ணீரோடு சிரித்தாள் சாந்திமதி " நீங்க வந்து பார்த்ததுமே அவனுக்கு பாதி காய்ச்சல் குணமாயிடுச்சு... மிஸ்டர் ஜெக்தீஷ். தேங்க்யூ பார் யுவர் கைண்ட் விசிட். ஏதாவது சாப்பிடறீங்களா? " கூல்ட்ரிங்க்ஸ் ஆர் காப்பி? "

"ஒண்ணும் வேண்டாம். "

" நோ மொதல் தடவையா என்னோட வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஹேவ் சம் ட்ரிங்க் எனக்கு சந்தோஷமாயிருக்கும். "

" சரி காப்பி, அரை டம்ளர் போதும்... "

கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே போனாள் சாந்திமதி. அடுத்த ஐந்தாவது நிமிஷம் காப்பியோடு வந்தாள்.

" உங்க நேரத்தை ப்ரவீன் வேஸ்ட் பண்ணிட்டிருக்கானா? "

" நோ நோ இட்ஸ் ஏ ப்ளஷர் " சாந்திமதி நீட்டிய காப்பியை வாங்கி உறிஞ்சிவிட்டு எழுந்தான் ஜெக்தீஷ். "

ப்ரவீன் அதிர்ச்சியோடு பார்த்தான்.

'என்ன டாட் புறப்பட்டீங்களா? "

" ம் டாடிக்கு நிறைய வேலையிருக்கு. ரெண்டு நாள் கழிச்சு டாடி வருவார். ஓ.கே... " அவனுடைய கன்னத்தை தட்டி விட்டு சாந்திமதியைப் பார்த்தான்.

" நான் வர்றேன். "

" தேங்க்யூ வெரி மச் மிஸ்டர் ஜெக்தீஷ். " கையைக் குவித்தாள் சாந்திமதி. ஜெக்தீஷ் வெளியே வந்தான். போர்ட்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கி நடக்கையில் பின்புறம் ப்ரவீன் "டாடி டாடி " என்ற கத்தல் ஈனமாய்க் கேட்டது.

## 9

மறுபடியும் மில்லுக்கு போகப் பிடிக்காமல் நேராய் காரை வீட்டுக்கு செலுத்தினான் ஜெக்தீஷ். போர்ட்டிகோவில் தர்சனா ஸ்கிப்பிங் விளையாடிக் கொண்டிருக்க காரை ஓரமாய் நிறுத்தி விட்டு உள்ளே போனான்.

வரவேற்பறை சோபாவில் கல்பகா உட்

காத்திருந்தான்.

முகத்தில் அனலாய் கோபம்.

"என்ன கல்பு அதிசயமா இன்னிக்கு இங்கேயே உட்கார்ந்திருக்கே?" சொல்லிக் கொண்டே அவளருகில் உட்கார்ந்தான். தோளைத் தொட்டான்.

அவள் பட்டென்று தட்டிவிட்டபடி கேட்டாள்.

"எங்கே போய்ட்டு வர்றீங்க?"

"என்ன இப்படி கேக்கறே? மில்லுக்குத் தான் போயிட்டு வர்றேன்"

"இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணியிருந்தேன். நீங்க மில்லுல இல்லேன்னு பி.ஏ. சொன்னாரே?"

சரலென்று வியர்த்து புன்னகைத்தான் ஜெக்தீஷ். "ஞானாம்பிகை மில் வரைக்கும் போயிருந்தேன். எம்.டி. இல்லேன்னதும் திரும்பிட்டேன். ஆமா மில்லுக்கு எதுகாகப் போன் பண்ணியிருந்தே?"

"என்னோட அண்ணன் மில்லுக்கு வந்திருந்தாராமே?"

"ஆமா."

"வந்தவரை வெளியே போ வேலையிருக்குன்னு சொல்லிட்டீங்களாமே?"

"நான் அப்படிச் சொல்லலை. வேலை நேரத்துல தொந்தரவு படுத்தாதீங்கன்னு சொல்லிட்டேன். அதைப் போய் தப்பா எடுத்துக்கிட்டார் போலிருக்கு."

"அவர் உங்களுக்கு மச்சான் ஞாபகமிருக்கா?"

"இருக்கு."

"இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலை. எங்க வீட்டு ஆளுங்களை கண்டாலே உங்களுக்கு எப்பவுமே இளப்பம் தான்."

"இதோ பார் கல்பகா எனக்கு யார் மேலயும் எந்தவிதமான இளப்பமும் இல்லை. உன்னோட அண்ணன் அநியாயத்துக்கு வக்காலத்து வாங்கிட்டு வந்தார். வேலை நேரத்துல தூங்கிட்டிருந்த ஒருத்தனை மானேஜர் டிஸ்மிஸ் பண்ணியிருக்கார். அது தப்புன்னு சொல்றார். இதை என்னால எப்படி ஏத்துக்க முடியும்? நீயே சொல்லு?"

"அதுக்காக வந்தவர் கிட்டே அப்படித் தான் பேசறதா? கொஞ்சம் இதமா பேசக்கூடாதா?"

ஜெக்தீஷ் ஆத்திரத்தோடு கல்பகாவை பார்த்தான். பிறகு விநாடிகளில் ஆத்திரத்தை மென்று கொண்டு மெல்லிய குரலில் சொன்னான்.

"கல்பகா ஒரு பெண்ணுக்கு கல்யாணம் ஆனதும் அவ பொறந்த வீட்டுக்காரங்களை பெரிசா நினைச்சுப் பேசறதை விட்டுடணும். இல்லேன்னா புருஷன் வீட்டுல குழப்பம் தான் வரும். நான் ஆரம்பத்திலேயே உன்கிட்டே சொன்னேன். உங்கண்ணன் அவருக்கு தெரிஞ்சவங்களை மில்லுல கொண்டு வந்து சேர்க்கும் போதே பின்னாடி இதனால நிறைய ப்ராப்ளம் வரும்னு சொன்னேன் நீ கேக்கலை. இப்போ ஒவ்வொரு ப்ராப்ளமா வருது."

"சரி சரி எங்கண்ணன் சேர்த்து விட்ட ஒரு ஆளை டிஸ்மிஸ் பண்ணியிருக்கீங்களே அதை வித்ட்ரா பண்ணிக்கிட்டு அந்த ஆளை வேலைக்கு எடுத்துக்குங்க."

"உன்னோட அண்ணன் சார்பில் நீ சொல்றியா?"

"ஆமா"

"இந்த மில்லு விவகாரத்துக்கெல்லாம் நீ வராதே கல்பகா. அப்புறம் நம்ம குடும்ப நிம்மதி கெட்டுடும். அந்த ஆளை நான் டிஸ்மிஸ் பண்ணலை. அந்த சம்பவம் நடந்தப்ப நான் ஸ்பாட்ல இல்லை. லோ டிஸ்மிஸ் பண்ணின மானேஜர் தான் அந்த ஆர்டரை வித்ட்ரா வாங்கறதா இல்லையான்னு முடிவு பண்ணணும்."

"அப்போ நீங்க இதில தலையிட மாட்டீங்க?"

"மாட்டேன்."

"அப்போ நான் மானேஜர் கிட்ட இதைப் பத்தி பேசறதை நீங்க ஆட்சேபிக்க மாட்டீங்கன்னு நினைக்கிறேன்." சொல்லிக்கொண்டே டெலிபோனை நோக்கிப் போனாள் கல்பகா.

டெலிபோனில் மானேஜரைக் கூப்பிட்டு சுருக்கமாய் இரண்டு நிமிஷம் பேசினாள். சில வார்த்தைப் பதங்களை கடுமையாக உபயோகித்தாள்.

"ம் அவர் சொல்லிட்டார். நீங்க பார்த்து ஆர்டரை 'வித்ட்ரா' பண்ணிட்டு அதுக்குப் பதிலா ஒரு வார்னிங் நோட்டீஸை குடுத்து அந்த ஆளை வேலைக்கு எடுத்துக்குங்க ம்... என்ன? பயப்படாதீங்க. ஜி.எம். ஒண்ணும் சொல்ல மாட்டார். நான் அவர் கிட்டே பேசிக்கிறேன்."

ரிஸீவரை வைத்து விட்டு...

உதட்டில் அரும்பிய ஒரு சந்தோஷப் புன்னகையோடு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஜெக்தீஷை பார்த்தாள் கல்பகா.

## 10

ஒரு வாரம் கழித்து காலை நேரத்தில் பத்து மணியளவில் சாந்திமதியிடமிருந்து ஜெக்தீஷ்க்கு அந்த போன் கால் வந்தது.

பிரைவேட் லைன் ஆனதால் பயமில்லாமல் பேசினான் ஜெக்தீஷ்.

"சொல்லுங்க மிஸஸ் சாந்திமதி என்ன விஷயம் ப்ரவீன் மறுபடியும் டாடி புராணம் பாட ஆரம்பிச்சுட்டானா?"

"நோ... நோ... இப்போ கொஞ்சம் பரவாயில்லை. டாடி வெளியூர் போயிருக்கார்னு சொன்ன சரின்னு சமத்தா கேட்டுக்கிறான்."

"ஸ்கூல் போக ஆரம்பிச்சுட்டானா?"

'' இன்னிக்கு அவனோட பர்த்டே. ''

'' சுவீட் ரொம்ப லேட்டாச் சொல்றீங்களே ''

'' நோ நோ சரியாத்தான் சொல்லியிருக்கேன். இன்னிக்கு மத்தியானம் எங்க வீட்ல உங்களுக்கு பர்த்டே லஞ்ச். ''

'' திடீர்னு சொல்றீங்களே? ''

'' திடீர்னு சொன்னா மத்தியான லஞ்சுக்கு வரமாட்டீங்களா? ''

'' நேத்தைக்கே சொல்லியிருந்தா கல்பகா கிட்டே சொல்லிட்டு வந்திருப்பேன். இன்னிக்கு அவ ப்ரிபேர் பண்ணி டிபன் பாக்ஸ்ல ரொப்பி அனுப்பிச்சுடுவாளே. ''

''ப்ரவீன் உங்களை ரொம்பவும் எதிர்பார்ப்பான். ''

'' எத்தனை மணிக்கு வரணும்? ''

'' ஒரு மணிக்கு வந்தா போதும். ''

'' ஓ.கே. வர்றேன். ப்ரவீனுக்கு என்ன ஸ்வீட் பிடிக்கும்? ''

'' ஓ.கே. வர்றேன். ப்ரவீனுக்கு என்ன ஸ்வீட் பிடிக்கும்?'' வாங்கிட்டு வர வேண்டாம். நோ

'' நோ... நோ... நீங்க எதையும் வாங்கிட்டு வர வேண்டாம். நோ பார்மாலிடீஸ் ப்ளீஸ். ''

'' டாய்ஸ்? ''

'' எதுவுமே வேண்டாம். நீங்க நேர்ல வர்றது தான் ஒரு பெரிய ப்ரசன்ட். சரியா ஒரு மணிக்கு வந்துடுங்க. நானும் ப்ரவீனும் வெயிட் பண்ணிட்டிருப்போம். ''

'' வர்றேன் கண்டிப்பா வர்றேன். ''

ரிஸீவரை சாத்திவிட்டு நிமிர்ந்தான் ஜெக்தீஷ்.

அறைக்கதவை யாரோ டொக் டொக்கென்று தட்டிக் கொண்டிருந்தார்கள்.

'' எஸ்... கம்... இன். ''

பி.ஏ. ஜானகிராமன் உள்ளே வந்தார்.

'' என்ன ஜானகிராமன்? ''

'' காட்டன் கவுன்சில் மெம்பர் பண்டாரி கோயமுத்தூர் வந்திருக்கார் ஸார். ஓட்டல் ப்ரஸிடெண்ட்ல தங்கியிருக்காராம். உங்களை மீட் பண்ணி பேசணும்னு சொன்னார். உங்க கன்வீனியன்ட் டயத்தைச் சொன்னா அப்பாயின்ட்மெண்ட் பிக்ஸ் பண்ணிக்கலாம். ''

மோவாயைத் தேய்த்து யோசித்தான் ஜெக்தீஷ்.

'' மத்தியானம் திரீ டு போர் பிக்ஸ் பண்ணுங்க. ''



''வாய்மை என்றால் என்ன?''

''லிப்ஸ்டிக் சார்.''

பி.கவிதா, சிதம்பரம்.



'' அந்த டயம் அவருக்கு அவெய்லபிளா இல்ல சார். மிஸ்டர் பண்டாரி லஞ்ச்ல உங்க கூட டிஸ்கஸ் பண்ண விரும்பறதா சொன்னார். நான் உங்களை கன்சல்ட் பண்ணிக்கிட்டு போன் செய்யறதா சொல்லியிருக்கேன். ''

'' லஞ்ச் அவர்லயா? நோ நோ வேண்டாம். நான் வீட்டுக்குப் போகணும். பண்டாரியை ஈவினிங் டீ அவர்ஸ்ல வரச் சொல்லுங்க. ''

'' ஓ.கே... ஸார். ''

ஜானகிராமன் தன் பாக்கெட்டில் இருந்த சின்ன நோட்புக்கில் நேரத்தைக் குறித்துக் கொண்டு நகர்ந்தார்.

ஜெக்தீஷ் பைல்களில் மூழ்க ஆரம்பித்தான். நடுநடுவே டில்லியிலிருந்தும், பம்பாயிலிருந்தும் வந்த எஸ்.டி.டி. கால்களை அட்டெண்ட் செய்தான். மணி பனிரெண்டு ஆன போது வீட்டிலிருந்து அந்த பெரிய டிபன் கேரியரை அட்டெண்டர் கொண்டு வந்தான்.

'' பெரியசாமி '' அவனை கூப்பிட்டான் ஜெக்தீஷ்.

'' என்ன சார்? ''

'' நான் இன்னிக்கு வெளியே லஞ்சுக்கு போறேன். அந்த கேரியர் சாப்பாட்டை நீயே சாப்பிட்டு வீட்ல கொண்டு போய் குடுக்கிறப்போ நான் சாப்பிட்டதா சொல்லிடு. ''

'' சரி ஸார். ''

'' டிபன் கேரியர்ல என்னென்ன அயிட்டம் இருந்ததுன்னு மத்தியானம் சொல்லிடு. இல்லேன்னா ராத்திரி போய் நான் மாட்டிக்குவேன். ''

'' சரி ஸார் '' பெரியசாமி சிரித்தான்.

ஜெக்தீஷ் எழுந்து புறப்பட ஆயத்தமானான். டாய்லெட் ரூமுக்குப் போய் முகத்தை கழுவிக் கொண்டு வந்தான். ட்ரஸ்ஸை திருத்தி கார் சாவியை எடுத்துக் கொண்டு திரும்பினான்.

டெலிபோன் கிர்ர்ர் என்றது.

ரிஸீவரை எடுத்தான்.

'' ஹலோ ஜெக்தீஷ் ஹியர் ''

'' நான் கல்பகா பேசறேன். ''

மறுமுனையில் கல்பகாவின் குரல் தீர்க்கமாய் கேட்டது.

## 11

ஜெக்தீஷ் ஒரு வினாடி தடுமாறி பிறகு இயல்புக்கு வந்து, '' என்ன கல்பகா? '' என்றான்.

'' அட்டெண்டர் பெரியசாமி டிபன் கேரியரோடு வந்து சேர்ந்துட்டானா? ''

'' இப்ப தான் வந்து சேர்ந்தான். ஏன் என்ன

விஷயம்?''
''ஒன்னுமில்லை. இன்னிக்கு ரெண்டு புது அயிட்டம் பண்ணி யிருக்கேன். சாயந்தரம் வந்ததும் ருசி எப்படியிருக்குன்னு சொல்ல ணும்''
''சொல்றேன்...''
''அப்புறம் சாயந்தரம் உங்களுக்கு ஒரு புரோகிராமும் இல் லையே...?''
''இல்ல ஏன்?''
''சாயந்தரம் சினிமாவுக்கு போலாங்களா''
''தாராளமா போலாம்.''
''நான் அஞ்சரை மணிக்கு ரெடியா இருப்பேன். வந்துட றீங்களா?''
''ம்...ம்...''
''ஏன் என்னமோ மாதிரி பேச பிரியப்படாத மாதிரி அவசர அவ சரமாக பேசறீங்க. எதிர்ல யாராவது உட்கார்ந்திட்டிருக்காங்களா?''
''இல்லையே பசிநேரம் கல்பகா உன்னோட டிபன் காரியர் வேற முன்னாடியே வெச்சிருக்கு''
''சரி சாப்பிடுங்க. ரிஸீவரை வெச்சுடட்டுமா?''
மறுமுனையில் கல்பகா ரிஸீவரை வைத்துவிட ஜெகதீஷ் பெரு மூச்சோடு நிமிர்ந்தான். கதவுக்கு வெளியே நின்றிருந்த அட்டெண்ட ரைக் கூப்பிட்டான்.
''பெரியசாமி''
''ஸார்''
''மொதல்ல அந்த டிபன் காரியரை அவுத்து, ஒவ்வொரு தட்டா எடுத்து பரப்பி வை. என்னமோ புது அயிட்டம் இருக்காம். என் னான்னு துனிஞ்சுண்டு சாப்பிட்டு பார்த்துடலாம்''
பெரியசாமி தன் காவி ஏறிய பற்களோடு சிரித்துக் கொண்டே, டிபன் காரியரை அவிழ்த்து ஒவ்வொரு மூடியாய் பரப்பினான்.
முதல் இரண்டு மூடிகளில் சாம்பார், ரசம் அதுக்கப்புறம் வந்த

**பலகாரம் செய்யும் போது**
ஆடையில் எண்ணெய்க்கறை படிந்துவிட்டால் உடனே சிறிது ஷாம்பூவைத் தடவி அந்த இடத்தோடு அலசி விடவும்.
-வே.சித்ராவேடிப்பன், திருவண்ணாமலை.





மூடியில் ஏதோ பச்சையாய் பிசுபிசுவென்று சதுரமாய் தெரிந்தது. இது தான் அவள் சொன்ன புது அயிட்டத்தில் ஒன்றாய் இருக்க வேண்டும்.
அந்தப் பிசுபிசுப்பான பொருளின் மீது கையை வைத்து அதன் ஓரத்தைப் பிய்த்து வாயில் போட்டான். ஒரு விநாடி புளித்து பிறகு ஒரேடியாய் இனித்தது.
இது என்ன வஸ்து?
புரியாமல் அடுத்த மூடியைத் திறந்தான்.
ரோஸ் நிறத்தில் ஜவ்வரிசியும் சேமியாவும் திரவத்தில் மிதந்தது. பெரியசாமி எட்டிப்பார்த்து ''பாயாசம் ஸார்'' என்றான்.
''நான் வெளியே போயிட்டு வந்துடறேன். சாப்பிட்டு அயிட்டம் வாரியா என்னவென்று சொல்லணும்''
''சரி ஸார்''
ஜெகதீஷ் வெளியே வந்தான். ஆகாயம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.
போர்ட்டிகோவில் காத்திருந்த காரில் பரவி டாடா பார்ட் இருக் கும் திசை நோக்கி போனான்.
கல்பகாவுக்கு தெரியாமல் அங்கே போவது ஏதோ ஒரு கிரிமினல் குற்றம் மாதிரி மனசுக்குத் தோன்றியது. இருதயம் ஒரு அவசரத் துடிப் பில் இருந்தது.
இப்படி போவது சரியா?
யோசனையிலேயே கார் நகர்ந்து டாடா பார்ட்டுக்குள் நுழைந்து சுந்தர் நகரின் அவென்யூவைத் தேடி போக வாசலிலேயே நின்றிருந் தார்கள் சாந்திமதியும் ப்ரவீனும்.
காரை மவுனமாக்கிவிட்டு இறங்கினான் ஜெகதீஷ். பிரவீன் ஓடி வந்து அவன் மேல் தாவினான். ''ஹேப்பி பர்த்டே டு யூ. பிரவீன்'' அவன் கன்னத்தில் தட்டினான் ஜெகதீஷ்?
''கம்... டாட்...''
பிரவீன் அவனை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினான். சாந்தி மதி புன்னகையோடு தொடர்ந்தபடி கேட்டாள். ''உங்களுக்கு தொந் தரவு தர்றோமா மிஸ்டர் ஜெக்தீஷ்?''
''நோ... நோ...''
நேராய் லஞ்ச் டேபிளுக்கு கூட்டிக் கொண்டு போன பிரவீன் அவனை உட்கார வைத்தான். ''மார்னிங் ஏன் டாட் வரலை. நானும் மம்மியும் அனுமன் டெம்பிளுக்கு போயிருந்தோம். மம்மி எனக்கு டாய்ஸ் ப்ரஸண்ட் பண்ணினாங்க நீங்க எனக்குஎன்ன டாட் பிர ஸெண்ட் பண்ணப்போறீங்க?''
''டேய் பிரவீன் அப்படியெல்லாம் கேட்கக்கூடாது.'' பதறும் குர லில் சொல்ல சாந்திமதியை ஒரு புன் சிரிப்போடு கையமர்த்தினான் ஜெக்தீஷ்.
பிரவீனிடம் திரும்பினான்.

''உனக்கு என்ன பிடிக்கும்ன்னு டாடிக்கு தெரியாது. பிரவீன் நீ இப்போ சொல்லுவியாம். டாடி என்ன ப்ரசன்ட் பண்ணுவாராம்.''

''எது கேட்டாலும்...?''

''எது கேட்டாலும்...''

''நிஜம்?''

''நிஜம்...''

''போலீஸ் - தீப் வீடியோ கேம்''

''ஓ...கே. ஷாப்பிங் போலாமா?''

சாந்திமதி குறுக்கிட்டாள். ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் மிஸ்டர் ஜெக்தீஷ்''

''நோ நோ லஞ்ச் சாப்பிட்டு நாம இப்போ ஷாப்பிங் போறோம். பிரவீனுக்கு வீடியோ கேம் வாங்கப்போறோம்.''

பிரவீன் கைகளைத் தட்டினான்.

சாந்திமதி பிரவீனை கோபத்தோடு பார்த்துக் கொண்டே தட்டுக்களைப் பரப்பினாள். அயிட்டங்களை பரிமாறிவிட்டு தானும் சாப்பிட உட்கார்ந்தாள்.

''மிஸ்டர் ஜெக்தீஷ் நாலு நாளைக்கு முன்னாடி நீங்க இங்கே வந்துட்டு போனதும் நெய்பர்ஸ் என்ன கேட்டாங்க தெரியுமா?''

''சொல்லுங்க''

''அவரோட பிரதரான்னு கேட்டாங்க?''

''நீங்க என்ன சொன்னீங்க?''

''நானும் ஆமான்னு சொல்லிவிட்டேன்'' ஜெக்தீஷ் சிரித்தான். லஞ்ச் எடுத்துக் கொண்டிருந்த நிமிடங்கள் கலகலப்பாய் ஓடிக் கொண்டிருந்த அதே நேரம்.

வெளியே ஆகாயம் கமற ஆரம்பித்தது. லேசான தூறலோடு தொடங்கிய மழை கொஞ்சம் கொஞ்சமாய் கனமாகி பூமியை சாட ஆரம்பித்தது.

சாந்திமதி எழுந்து போய் கண்ணாடி ஜன்னல்கள் எல்லாவற்றையும் சாத்தி விட்டு வந்தாள். மழை தீவிரமாக பெய்தது.

## 12

மழை ஓய்ந்த போது மணி 4.30

ஜெகதீஷ் லஞ்ச் முடித்த கையோடு புறப்பட முடியாமல் மழை தடுக்க இதோ மழை நின்று விடும் என்ற எதிர்பார்ப்பில் நிமிஷங்களை ஓட்ட முடிவில் மழை நின்ற போது மணி 4.30. அதற்கு பின்னால் காரில் லஷ்மி காம்ப்ளக்ஸ் போய் பிரவீன் கேட்ட வீடியோ கேமை வாங்கி பிரசன்ட் பண்ணி வாட்சை பார்த்த போது 6.00 மணி.

வீட்டில் கல்பகா சினிமாவுக்கு போக காத்திருப்பாள்.



அரை மணி நேரம் லேட்.

சாந்திமதியையும், பிரவீனையும் டாடாபாட்டில் இறக்கிவிட்டு மழை பெய்து தண்ணீர் தேங்கியிருந்த ரோடுகளில் காரை விரட்டிக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

போர்ட்டிகோவில் காரை நிறுத்தியபோது-

6.10.

காரை விட்டு இறங்கி வேக வேகமாய் நடந்து உள்ளே போனான் ஜெகதீஷ். என்ன பொய்யைச் சொல்லி எப்படி சமாளித்து யோசித்தபடியே ஹாலுக்குள் நுழைந்தான்.

அதிர்ந்தான்.

கல்பகா தலையைப் பின்னாமல் சாதாரண சேலையில் கடுகடு வென்று உட்கார்ந்திருக்க எதிரேயிருந்த நாற்காலியில் புருஷோத்தமன் காலை ஆட்டியபடி உட்கார்ந்திருந்தான். ஜெகதீஷை பார்த்ததும் ''அதோ மாப்பிள்ளையே வந்துட்டார்'' என்று சொல்லி காலை ஆட்டுவதை நிறுத்தினான்.

''என்ன கல்பகா சினிமாவுக்கு ரெடியாகலையா?''

''இன்னிக்கு சினிமா வேண்டாம். நாளைக்கு போலாம்''

''உங்கண்ணன் எப்ப வந்தார்?''

''அரை மணி நேரமாச்சு. ஆமா மத்தியானம் நீங்க சாப்பிட்டீங்களா?''

''சாப்பிட்டேனே''



''மாப்பிள்ளை போலீஸ்காரர்.''

''அப்படின்னா சீர்வரிசை அதிகமாக எதிர்பார்ப்பாங்களா?''

''இல்லை மாமூலா செய்யறதை செஞ்சா போதும்.''

பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.

''ரெண்டு புது அயிட்டம் பண்ணி அனுப்பிச்சிருந்தேனே. சாப்பிட்டீங்களா?''

''சாப்பிட்டேனே''

''என்னென்ன அயிட்டம்?''

''பேர் தெரியலை. ஒண்ணு பச்சையா களி மாதிரி?''

''அது களியில்லை கீரை அல்வா''

''அப்புறம் ரோஸ் கலர்ல பாயாசம் மாதிரி''

''ரோஸ் மில்க் பாயாசம்''

''ஆமா ஆமா ரோஸ் மில்க் பாயாசம் ரெண்டுமே ஜோர். மத்த காய்கறி அயிட்டமும் பிரமாதம். வயிறு ஏகமா ரொம்பி ஆபீஸான்னும் பார்க்காமே ஒரு குட்டி தூக்கமே போட்டுட்டேன்''

''அப்படி தூங்கறதாயிருந்தா

அட்டெண்டர் பெரியசாமி தானே தூங்கியிருக்காரும்''

''நீ அலுப்பிலேதை சாப்பிட முடியாதுன்னு சொன்னா உன் மனசு கஷ்டப்படுமேன்னு தான் அப்படி சொன்னேன். பெரியசாமி உன் கிட்டே உண்மையைச் சொல்லிட்டானா?''

''அவன் சொல்லுவானா? வேலிக்கு ஓணான் சாட்சி என்னோட அண்ணன் உங்களைப் பார்க்கிறதுக்காக ஆபீஸ் வந்தாராம். பெரிய சாமி கேரியரை பரப்பி வெச்சுகிட்டு சாப்பிட்டுட்டிருந்தானாம். நீங்க ஆபீஸ்லயே இல்லையாம்''

ஜெக்தீஷ் தலையை திருப்பி 'தேமே' என்று உட்கார்ந்திருந்த புருஷோத்தமனை முறைக்க கல்பகா கத்தினாள்.

''எங்கண்ணனை ஏன் முறைக்கறீங்க. எம் மூஞ்சிய பார்த்து பதில் சொல்லுங்க மத்தியானம் சாப்பிடாமே அவசர அவசரமா எங்கே போனீங்க?''

ஜெக்தீஷ் கோபமாகி சிலிர்த்தான். ''இதோ பார் கல்பகா ஒரு ஆண் வெளியே போறான்னா அவனுக்கு எவ்வளவோ வேலை இருக்கும். அதிலும் நான் ஒரு மில்லுக்கு ஜி.எம். வெளியில நான் எங்கே போனேன் யாரை பார்க்கப் போறேன்னு நீ கேக்கிறது அநாவசியம். வீட்ல இருக்கிற வேலையை நீ ஒழுங்கா பாரு''

''கல்பகா தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த புருஷோத்தமன்னை ஏறிட்டாள்.

''அண்ணா...''

''என்ன கல்பகா''

''நீ புறப்படு. நானும் அவரும் கொஞ்சம் பேசணும். நீ வீட்ல போய் அம்மா அப்பாகிட்டே இதையெல்லாம் சொல்லிட்டிருக்காதே அவங்க மனசு கஷ்டப்படும்.''

''சரிம்மா''

புருஷோத்தமன் எழுந்து நடக்க கல்பகா ஜெக்தீஷை பார்த்தாள். மெல்லிய குரலில் சொன்னாள். ''இன்னிக்கு மத்தியானம் 2.00 மணியிலிருந்து சாயந்தரம் 6.00 மணி வரைக்கும் உங்களுக்கு என்னென்ன புரோகிராம் இருந்ததுன்னு நான் சொல்லட்டுமா? உங்க பி.ஏ. ஜானகிராமன் வீட்டுக்கு ரெண்டு தடவை போன் பண்ணி கேட்டார். காட்டன் கௌன்சில் மெம்பர் ஒருத்தர் யாரோ உங்களை அவசர அவசரமாக பார்த்து பேசறதுக்காக வந்தாராம். ஆனா நீங்க ஆபீஸ்ல இல்லை. எங்கே போயிருந்தீங்கன்னு சொல்ல முடியுமா?''

ஜெக்தீஷ் கல்பகாவையே பார்த்தான்.

''ம். சொல்லுங்க. எங்கே போயிருந்தீங்க?''

இவள் விடமாட்டாள்.

எதையாவது சொல்லி சமாளிக்கலாம்.

''ஆர்.எஸ். புரத்துல ஒரு பிரெண்டை பார்க்கப் போயிருந்தேன். மழையில மாட்டிக்கிட்டேன். மழை நின்னதும் புறப்பட்டு வர்



தேன்''

''மழை நாலரை மணிக்கே நின்னுடுச்சு''

''அப்புறமும் பேசிட்டிருந்தேன்''

''இதோ பாருங்க பொய்க்கு மேல பொய்யா சொல்லிட்டு போகாதீங்க. நல்லா யோசிச்சு சொல்லுங்க. நீங்க போனது ஆர்.எஸ்.புரமா? டாட்டாபேட்டா?''

திடுக்கென்று நிமிர்ந்தான் ஜெகதீஷ்.

கல்பகா நிஷ்டூரமாய் அவனைப்பார்த்தபடி கேட்டாள்.

''அந்த கொடைக்கானல்காரியை பார்க்கப்போயிருந்தீங்க. இல்லையா? நான் வீட்ல இருக்கிறவ தான். ஆனா எனக்கு எல்லா நிஜமும் தெரிஞ்சுடும். எப்படி தெரிஞ்சதுன்னு கேக்கறீங்களா''

ஜெக்தீஷ் மவுனம் சாதிக்க தொடர்ந்தாள்.

''கொடைக்கானல்காரி வீட்டுக்கு எதிர் வீட்டுல தான் என்னோட அண்ணன் புருஷோத்தமன் பிரண்ட் ரவிச்சந்திரன் இருக்கார். அவர் போன் பண்ணி அண்ணனுக்கு விஷயத்தை சொல்லியிருக்கார்''

''அ...அது வந்து கல்பகா. அ... அந்த பையனுக்கு அப்பா இல்லை. அ... அ... அவனுக்கு இன்னிக்கு பொறந்த நாள் அதான்''

''அதான் அந்தப்பையனுக்கு அப்பா மாதிரியும் அவளுக்கு புருஷன் மாதிரியும் இருக்கப் போயிட்டீங்களாக்கும்''

''கல்பகா இப்படி கொச்சைத்தனமா பேசாதே''

''நான் பேசறது கொச்சைத்தனம் சரி. நீங்க செய்யறது கொச்சைத்தனம் இல்லையா?''

''நீ நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லே''

''அப்படி எதுவும் இல்லேன்னா ஏன் பொய் சொல்றீங்க?''

''நீ ஏதாவது தப்பா நினைச்சுடப்போறியேன்னு தான் நான் உண்மையைச் சொல்லலை. அந்தப் பொண்ணு அப்பேர்ப்பட்டவ இல்லை கல்பகா''

''ஆரம்பத்துல அவ அப்படித்தாங்க காட்டிக்குவா. விபச்சாரி கூட அவளைத் தொடறப்ப ஆரம்பத்துல பிகுகாட்டிட்டு தான் அப்புறமா

''என்னப்பா இது 8 போட சொன்னா வண்டியில் நேரா போயிக்காட்டாம எட்டு போடுறே!''

''இது டிஜிட்டல் எட்டு சார்.''

பி.கவிதா, சிதம்பரம்



எல்லாத்தையும் அவுத்து போடுவா''

''கல்பகா'' வீறிட்ட ஜெக்தீஷ் அடிப்பதற்காக கையை ஓங்கி னான்.

''ம்... அடிங்க இந்த ஏழு வருஷ காலத்துல அதைத்தான் நீங்க பண்ணலை. அந்த கடன்காரி உங்களுக்கு பழக்கமான நேரம் அதையும் பண்ணிடுங்க''

ஜெக்தீஷ் கையை தாழ்த்திக் கொண்டு விருட்டென்று வாசலை நோக்கிப் போனான். கல்பகா ஓடி வந்து கையைப் பற்றினாள்.

''எங்கே போறீங்க...?''

''நான் இங்கே இருந்தா நீ பேசிட்டேதான் இருப்பே நீ பேசினா எனக்கு கோபம் வரும் ... நான் மில்லுக்குப் போறேன்... ராத்திரி பத்துமணிக்கு வர்றேன். ஆத்திரத்தை ஒரு ஓரமா ஒதுக்கி வெச்சுட்டு நல்லா யோசனை பண்ணு... எனக்கிருக்கிற வசதிக்கும் சுதந்திரத்துக்கும் நான் நினைச்சிருந்தா எத்தனையோ பெண்களை தொட்டிருக்க முடியும் .நீ எனக்கு உண்மையானவளா இருக்க வேண்டாமா? இறந்துபோன அப்பாவை அந்தப் பையன் ப்ரவீன்என்னோட உருவத்துல பார்த்து சந்தோஷப்படறான்... அந்த பிஞ்சு மனசுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கத்தான் போனேன் அவகிட்ட சந்தோஷத்தை வாங்க போகலை...''

படபடவென்று பொரிந்து விட்டு-கல்பகாவின் கையை உதறி விட்டு போர்ட்டிகோவை நோக்கிப் போனான் ஜெக்தீஷ் காரில் ஏறி கோபமாய் நகர்த்தினான்.



முகத்தில் எண்ணெய்ப்பசை இருப்பதைத் தவிர்க்க ஐஸ் கட்டியை மெல்லிய துணியில் வைத்துக் கட்டி காலை, மாலை இரு வேளைகளிலும் முகத்தில் ஒற்றி வரலாம்.

-கே.ராகவி, வந்தவாசி

## 13

ஜெக்தீஷ் கோபமாய் காரில் புறப்பட்டுப் போனதும் கல்பகா அவிழ்ந்து போன கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு டெலிபோனை நோக்கி போனாள். தன் அண்ணன் புருஷோத்தமனுக்கு போன் செய்தாள்.

அவன் பத்தே நிமிஷத்தில் தன் சாயம் போன ஸ்கூட்டரில் வந்து சேர்ந்தான். போலிக் கரிசனத்தோடு அவள



ருகே வந்து உட்கார்ந்தான்.

''என்ன கல்பகா... மாப்பிளை... என்ன சொல்றார்...?''

''நாம நினைக்கிறமாதிரி எந்த தப்பிதமான உறவும் அவங்களுக்குள்ளே இல்லையாம். அந்தப் பையனுக்கு பொறந்த நாளுன்னு போனாராம்...''

''மாப்பிள்ளை சொன்னதை நீயும் நம்பிட்டியா கல்பகா...? அவ வீட்டுக்கு அவர் சாப்பிட போறப்ப மணி ஒன்னரை என்னோட ப்ரண்ட் ரவிச்சந்திரன் எனக்கு போன்பண்ணி தகவல் சொன்னப்ப மணி ரெண்டு. நான் ரெண்டேகால் மணிக்கெல்லாம் ரவிச்சந்திரன் வீட்டுக்கு வந்துட்டேன். அந்த நிமிஷத்திலிருந்தே நாலரை மணி வரைக்கும் உம் புருஷன் அவ வீட்லதான் இருந்திருக்கார். மழை தான் காரணம்னு வெச்சுகிட்டாலும்... கார்ல போனவர்க்கு மழையைப் பத்தி என்ன கவலை....?''

கல்பகா யோசித்தாள்.

''நல்லா...யோசிச்சு பாரும்மா...கல்பகா...! செத்துப் போன தன் புருஷனோட சாயல் நம்ம மாப்பிள்ளைகிட்டே இருக்கிறதுனால அவளுக்கு அவர்மேல ஒரு பிடிப்பு விழுந்துடுச்சு... இந்த பிடிப்பு பழகப் பழக இறுகிடும்... இறுகிப் போன பின்னாடி உன்னால எதுவுமே பண்ண முடியாது... ஆரம்பத்திலேயே கவனிச்சாத்தான் உண்டு...''

''இப்போ என்னண்ணா பண்ணலாங்கிறே...?'' எனக்கு குழப்பத்துல தலையெல்லாம் 'விண் விண்'ன்னு தெறிக்குது...''

''நீயும், நானும் நேரா அவ வீட்டுக்கு போவோம்... ஏண்டி இப்படி நல்லா இருக்கிற குடும்பத்தை கெடுக்கிறேன்னு... நாக்கை பிடுங்கிக்கிற மாதிரி 'நறுக்'ன்னு நாலு கேள்வி கேட்டுட்டு வரலாம்...''

''இப்பவேவா...''

''ம். இப்பவே தான்... எதையும் தள்ளிப் போடக்கூடாதம்மா முளையிலேயே கிள்ளி எறியறது ரொம்பவும் சுலபம்...''

''அவர்க்குத் தெரிஞ்சா கோவிச்சுக்குவார்ண்ணா...''

''அவர்க்கு பயந்தியானா...உன்னோட வாழ்க்கையே நாசமாயிடும் கல்பகா... இது உன்னோட வாழ்க்கை பிரச்சனை...உன்னோட உரிமையை விட்டுத்தராமே நீ போராடணும்...புறப்படு... ஒரு ஆட்டோ பிடிச்சு போயிட்டு வந்துரலாம்...''

கல்பகா புறப்பட்டாள்.

## 14

பிரவீனை மடியில் இருத்திக் கொண்டு டி.வி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த ஒரு கார்ட்டூன் படத்தை பார்த்துக் கொண்டிருந்த சாந்திமதி-வாசலில் ஆட்டோ படபடக்கும்

சத்தம் கேட்டு எழுந்தாள். ''ப்ரவீன் யாரோவர்றாங்க... நம்ம வீட்டு வாசல்லதான் ஆட்டோ நிக்குது...''

என்று சொல்லிக் கொண்டே ஜன்னல் வழியாய் வாசலைப் பார்த்தாள்.

அந்த சாயங்கால இருட்டிலும் சாந்திமதி, கல்பகாவை அடையாளம் கண்டு கொண்டாள். ''அட! இவங்க... மிஸஸ் ஜெகதீஷ்... எதுக்காக வர்றாங்க...?''

கதவைத் திறந்து வாசலுக்கு வந்தாள். உதட்டில் புன்னகையை தயாராய் நிறுத்திக் கொண்டாள்.

''வாங்க...''

அவளுடைய 'வாங்க' வை லட்சியப்படுத்தாமல்-கல்பகாவும், புருஷோத்தமனும் போர்ட்டிகோ படியேறி அவளருகே வந்தார்கள்.

கல்பகா கடுகடுப்பாய் அவளிடம் கேட்டாள்.

''என்னை உனக்கு தெரியுதா...?''

''தெரியாம என்னங்க... நீங்க மிஸ்டர் ஜெக்தீஷோட ஒய்ப்... உள்ளே வாங்க... வந்து உட்காருங்க...'' சாந்திமதி ஆர்வமாய் கூப்பிட்டாள்.

''நாங்க உன்னோட வீட்ல உட்கார வரலை...?''

சாந்திமதி முகம் மாறினாள்.

''ஏன் ஒரு மாதிரியா பேசறீங்க...?''

''நீயே ஒரு மாதிரிபட்டது தானே?''

''வாட் டூ யூ மீன்...?'' சாந்திமதி அதிர-புருஷோத்தமன் தன்னுடைய நெளி நெளிவான கிராப்பைக் கோதிக் கொண்டு அந்த அமிலத்தனமான கேள்வியைக் கேட்டான்.

''என்னடி...இங்கிலிஷ்ல பேசினா பத்தினியாயிடுவியா...?''

சாந்திமதி குப்பென்று முகம் இருண்டாள். உள்ளேயிருந்து ஓடி

கால் கிலோ ஜவ்வரிசியை 5 நிமிடங்கள் ஊறவைத்துக் கொள்ளவும், 100 கிராம் வேர்க் கடலையை தோலை எடுத்து விட்டு பொடித்துக் கொள்ளவும். அரை கிலோ உருளைக்கிழங்கை வேக வைத்து உரித்துக் கொள்ளவும். பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை போட்டு ஜவ்வரிசியைப் பிழிந்துப் போட்டு பிசைந்து வடை செய்யலாம்.

-வே.சித்ராவேடியப்பன்,
திருவண்ணாமலை.





வந்த ப்ரவீன் ''மம்மி யார் இவங்க?'' என்று கேட்டுகொண்டே... அவளுடைய இடுப்பைக் கட்டிக் கொண்டான்.

கல்பகா தொடர்ந்தாள் அனலாய்.

''புருஷன் செத்துப் போனதுமே...உனக்கு ஆம்பிளை தேவையிருந்தா...வேற எந்தப் பக்கமாவது கண்ணை போட வேண்டியதுதானே...என்னோட வீடுதானா கிடைச்சது...?''

''நீ...நீ... நீங்க என்ன சொல்றீங்க...?''

''பார்த்தியாண்ணா...அவ ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்கறதை...''

''அவளுக்கு புரியலைன்னா நான் சொல்றேன் கல்பகா...! கண்ணுக்கு லட்சணமா வசதியா இருக்கிற எந்த ஆம்பிளையாவது கண்ணுல பட்டா... தன்னோட பையனை விட்டு ''டாடி...டாடி'ன்னு கூப்பிட வெக்க வேண்டியது... வீட்டுக்கு வரச் சொல்லி விருந்து வெக்க வேண்டியது-ஏமாந்தவனா இருந்தா பணத்தை கறக்க வேண்டியது...''

''ஸ்டாப் இட்...!''

''உண்மையைச் சொன்னா கோபம் வருது... என்னோட தங்கச்சி கல்பகாவும் மாப்பிள்ளையும் ஏழு வருஷமா...சந்தோஷமா குடும்பம் நடத்திட்டு வர்றாங்க...

நீ உள்ளே வந்து பூந்ததும் குழப்பம் உண்டாயிடுச்சு... என்னிக்குமே அடிக்க கையை ஓங்காதவர்...இன்னிக்கு ஓங்கிட்டார்...''

சாந்திமதி கண்ணீரோடு இருவரையும் மாறி மாறி பார்த்தாள். நீங்க அவரையும் என்னையும் தப்பா புரிஞ்சுகிட்டு பேசறீங்க...என்னோட சன் ப்ரவீனுக்காகத் தான் அவர் வந்தார்...மத்தபடி எந்த விதமான விகல்பமான எண்ணமும் இல்லை... மிஸ்டர் ஜெக்தீஷ் ஒரு ஜெண்டில்மேன்...''

''தன்னோட-மகனைவிட்டு இன்னொரு ஆம்பிளையை 'அப்பா'ன்னு கூப்பிட வெக்கிறவ. அந்த ஆம்பிளைக்கு முந்தானை விரிக்கமாட்டாங்கறது என்ன நிச்சயம்...? எங்க மாப்பிள்ளை ஒரு சமூக அந்தஸ்தோடு இருக்கிறவர்... அவரை நாலுபேர் மட்டமா பேசற மாதிரி வெச்சுடாதே... எங்க குடும்ப கௌரவத்தை நடு வீதிக்கு கொண்டு வந்துடாதே...''

''ஒண்ணு மில்லாத விஷயத்தை ஏன் இப்படி பெரிசு படுத்தறீங்க...? அவர் இங்கே ஒரு நல்ல நண்பராத்தான் வர்றார்...''

''அந்தக்கதையையெல்லாம் நாங்க நம்பத் தயாரில்லை உன்னோட வேசித்தனத்தையெல்லாம் வேற எவன்கிட்டயாவது வெச்சுக்க...ஒரு நல்ல குடும்பத்தை பாழாக்கின பாவத்தை கொட்டிக்காதே வாண்ணா போலாம்...நல்லவளா இருந்தா இந்த வார்த்தையை எல்லாம் கேட்ட பின்னாடி நாக்கை பிடுங்கிட்டு சாகணும்...''

கல்பகா ஆவேசமா குதறிவிட்டு... போர்ட்டிகோ படி இறங்கினாள். புருஷோத்தமனும் கீழே இறங்கி தொடர்ந்தான்.

ராத்திரி பத்துமணி.

வரவேற்பறையின் நீண்ட சோபாவில் தூங்காத கண்களோடும் பசிக்கிற வயிறோடும் காத்திருந்தாள் கல்பகா அருகே படுத்திருந்த தர்சனா அடிக்கடி கண்விழித்து 'அப்பா வந்துட்டாராம்மா' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

மனம் மறுகிக் கொண்டிருந்தது.

'சாயந்தரம் அவர் வந்தபோது கொஞ்சம் இதமாய் பேசியிருக்கலாம்... அவருக்கு ஆத்திரம் வருகிற மாதிரி வார்த்தைகளை அதிகமாய்த்தான் வீசி விட்டோம்

உண்மையிலேயே அந்தப்பெண்ணுக்கும் அவருக்கும் அந்த விதமான உறவு ஏதுமில்லையோ? நான்தான் அவசரப்பட்டு அண்ணனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு வார்த்தைகளைக் கொட்டி கொச்சைப் படுத்தி விட்டேனோ...'

'இந்நேரம் மில்லில்தான் இருப்பார்...போன் செய்து சமாதானமாய் பேசி பார்க்கலாமா...?'

டெலிபோனை நோக்கிப் போய்-ரிசீவரை எடுத்து பிடலைச் சுழற்றினாள். மறுமுனையில் ரிங் போயிற்று யாரோ எடுத்து ''ஹலோ'' என்றார்கள்.

''ஜி.எம்.இருக்காரா...?'' கல்பகாகேட்டாள்.

''பேசறது அம்மாங்களா...? நான் ஜானகிராமன்! அய்யா ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே புறப்பட்டு போயிட்டாங்கம்மா...''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியேவா...?''

''ஆமாம்மா?''

''இங்க வரலையே''

''அப்போ கிளப்புக்கு போயிருப்பாங்க...''

கல்பகா இணைப்பை அணைத்துவிட்டு-கிளப் போன் நெம்பரை ஞாபகத்துக்கு கொண்டுவர முயற்சித்தாள்.

அதே விநாடி-

போர்ட்டிகோவில் காரின் சீறல் கேட்டது.

கையில் ரிசீவரோடு திரும்பிப் பார்த்தாள்.

ஜெக்தீஷ் காரை போர்ட்டிகோவில் நிறுத்திவிட்டு-வேக வேகமாய் உள்ளே வந்து கொண்டிருந்தான். ரிசீவரை வைத்துவிட்டு அவனருகே ஓடினாள்.

''என்னங்க எம்மேலே கோபமா...?''

அவளுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல் இறுகிய முகத்தோடு-கல்பாவை ஏறிட்டான் ஜெக்தீஷ் மெல்லிய குரலில் கேட்டான்.

''நீயும் உன்னோட அண்ணனும் சாந்திமதியோட வீட்டுக்கு



போயிருந்தீங்களா?''

''ஆ...மா...''

''உங்களை யார் போகச் சொன்னது?''

''யார் போகச் சொல்லணும்...? என்னோட வாழ்க்கை நாசமாறதை நான் பார்த்திட்டிருக்க முடியுமா... அதான் நேரிடையாகவே அவ வீட்டுக்குப் போய் பேசிட்டேன்...''

''சரி...என்னோடு புறப்படு...''

''எங்கே...?''

''எதிர் கேள்வி கேக்காம...புறப்படு...''

ஜெக்தீஷின் கோபத்தைப் பார்த்து பயந்து போன கல்பகா...''வர்றேங்க...ஆனா குழந்தை தூங்கறாளே...''என்றாள் தயக்கமாய்.

''வேலைக்காரி பாக்கியத்தை பார்த்துக்கச் சொல்லிட்டு புறப்படு...''

கல்பகா சொல்லிட்டு புறப்பட்டாள்.

ஜெக்தீஷ் போர்ட்டிகோவிலிருந்தும் காரை விருட்டென்று எடுத்தான். கல்பகா மறுபடியும் கேட்டாள் ''எங்கேங்க போறோம்...?''

''பேசாமே வா...''

கல்பகா வாயை மூடிக்கொண்டாள்.

கார் போக்குவரத்து ஓய்ந்துபோன ரோடுகளில் எண் பதில் விரிக் கொண்டு போனது. வளைவுகளில் 'க்றீச்' சென்று திரும்பியது. கல்பகா குழப்பமாக ஜெக்தீஷைப் பார்த்தாள்.

கார் வெங்கடகிருஷ்ணா ரோட்டில் நேராய் நூல் பிடித்த மாதிரி போய்கடைசி கட்டிடத்தின் முன் நின்றது.

கல்பகா வெளிச்சத்தோடு தெரிந்த அந்த கட்டிடத்தை காரின் ஜன்னல் வழியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள் போர்டு தெரிந்தது.

ஷண்முகா நர்சிங் ஹோம்.

கல்பகா தவிப்போடு கேட்டாள்.

''என்னங்க இங்கே கூட்டிட்டு வந்திருக்கீங்க...?''

''என் மனைவி சமையல் பண்ணினா டி.வி.சமையல் மாதிரி இருக்கும்''

''புரியலையே...!''

''பார்க்கலாம் ஆனா சாப்பிட முடியாது''

பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்.



காரின் இக்னீஷியனை அணைத்துக் கொண்டே ஜெக்தீஷ் சொன்னான்.

''சாந்திமதி இங்கதான் இருக்கா.''

''ஏன்...ஏன்...''

''நீயும் உன்னோட அண்ணனும் கேட்ட கேள்விகளோட அனலைத் தாங்கிக்க முடியாம அவ பாய்ஸன் எடுத்துகிட்டா...டாக்டர்ஸ் நோ ஹோப்ஸ் சொல்லிட்டாங்க... அந்தப் பொண்ணு தன் வாழ்க்கையோட கடைசி நிமிஷங்கள்ல இருக்கா...இன்னும் அவளை கேட்க வேண்டிய கேள்வி ஏதாவது இருந்தா கேட்டுடு...வா...''

காரில் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள் கல்பகா.

ஜெக்தீஷ் கதவைத் திறந்து விட்டான்.

''ம்...இறங்கு சீக்கிரம்...''

முடுக்கிவிட்ட பொம்மை மாதிரி கீழே இறங்கினாள் கல்பகா அவள் இறங்கியதும் காரின் கதவை அறைந்து சாத்திவிட்டு நர்சிங் ஹோமின் உள்ளே நடந்தான். டியூப்லைட்டின் சோகையான வெளிச்சத்தில்-நர்சிங் ஹோமின் வராந்தா நீளமாய் தெரிந்தது இரண்டொரு நர்ஸ்களின் வெண்ணிற ஆடை பளிச்சென்று தெரிந்தது. மறைந்தது.

ஜெக்தீஷ் ஒன்றும் பேசாமல்-கல்பகா பின் தொடர-வேக வேகமாய் நடந்து-இரண்டாவது மாடியைத் தொட்டு இன்டென்ஸிவ் வார்டுக்கு முன்னால் வந்து நின்ற அதே நேரம் ப்ரவீன் டாடி என்று ஓடி வந்து ஜெக்தீஷின் இடுப்பை ஆர்வமாய் கட்டிக்கொண்டான்.

''மம்மி எங்கே ப்ரவீன்...?''

''அ.... அந்த ரூமுக்கு கொண்டு போயிருக்காங்க... டாட்...'' ப்ரவீன் கையை காட்ட அடுத்த அறையை நோக்கி போனார்கள்.

அடுத்த அறை சாத்தியிருந்தது.

அறையின் நெற்றியில் சிவப்பு விளக்கு ஒளிர்ந்தது. வெந்நீர் நிரம்பிய ட்ரேயோடும் ஏராளமான பஞ்சோடும்-அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக முயன்ற நர்ஸை கெஞ்சும் குரலில் மடக்கினான் ஜெக்தீஷ்.

''டாக்டர் நீங்க செக் அப் பண்ண என்ன வேணும்.''

''முதல்ல ஒரு பிளாங்க் செக் வேணும்...!''

பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்





''பேஷண்ட் எப்படியிருக்காங்க சிஸ்டர்...''

''உயிரைக் காப்பாத்த டாக்டர் முயற்சி பண்ணிட்டிருக்கார்''-சொல்லிவிட்டு அவள் உள்ளே போய்விட-வெளியே இருந்த பெஞ்சில் காத்திருக்க ஆரம்பித்தார்கள். ஜெக்தீஷ் இருப்புக்கொள்ளாமல் வராந்தாவில் நடைபோட-

கல்பகாவின் அருகில் உட்கார்ந்திருந்த ப்ரவீன் கல்பகாவின் தோளை மெல்லத் தொட்டான். ''ஆன்ட்டி...''

''என்னப்பா...?'' அவனுடைய தலையை கண்ணீரோடு கோதினாள். ''மம்மி ஆஸ்பத்திரிக்கு வர்றதுக்கு முன்னாடி-இந்த லெட்டரை என்கிட்ட குடுத்து-ஆன்டி ஆஸ்பத்திரிக்கு வந்தா இந்த லெட்டரைக் குடுத்துடுன்னு சொன்னாங்க... வாங்கிக்கிறீங்களா ஆன்டி...'' ப்ரவீன் தன் பான்ட்பாக்கெட்டிலிருந்து-நான்காய் மடிக்கப்பட்ட அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினான்.

தவிப்போடு அதை வாங்கிப் பிரித்தாள் கல்பகா.

திருத்தமான கையெழுத்தில் கடிதம் ஓடியிருந்தது.

அன்புக்குரிய திருமதி ஜெக்தீஷ் அவர்களுக்கு.

சாந்திமதியின் கடைசி வணக்கம். உங்கள் பேரில் எனக்கு எந்த விதமான கோபமும் இல்லை...உங்களுடைய கோபம் நியாயமானது. கணவன் இன்னொரு பெண்ணின் வீட்டுக்குப் போனால்-எந்த மனைவிக்குமே எழக்கூடிய சந்தேகம் உங்களுக்கும் எழுந்துள்ளது. என் கணவர் இறந்த பிறகு-என்னுடைய சந்தோஷமெல்லாம் ப்ரவீன்தான். ராத்திரி நேரங்களில் நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது-விசும்பல் சத்தம் கேட்டு எழுந்து பார்ப்பேன்... ப்ரவீன் சுவரில் மாட்டியிருக்கும் தன் அப்பாவின் போட்டோவுக்குப் பக்கத்தில் நின்று அழுது கொண்டிருப்பான். 'டாடி...டாடி...' என்று தன்பிஞ்சுக் கைகளால் அப்பாவின் முகத்தை வருடி வருடி பார்ப்பான்.

மரணத்தின் விதியைப் பற்றி அவனுக்குத் தெரியாது. செத்துப்போன அப்பா எப்படியும் வருவார் என்கிற நம்பிக்கை அவனுக்கு...! அந் தவிநாடிக்காக காத்துக் கொண்டிருந்தவன்-என் கணவரின் சாயலில் உங்கள் கணவரைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டுப் போனான் அவனுடைய ஆர்வத்துக்கும் சந்தோஷத்துக்கும் என்னால் தடை விதிக்க முடியவில்லை...

உங்கள் கணவரை பார்த்த நாளிலிருந்து... ப்ரவீன் நிறைய சாப்பிட்டான்...கனவில் கூட சிரித்தான் ராத்திரி நேரங்களில் அந்த விசும்பல் சத்தம் கிடையாது...

இன்று ப்ரவீனுக்கு பிறந்தநாள், 'டாடி எங்கே...டாடி எங்கே' என்று கேட்டு ஒரே நச்சரிப்பு .மத்தியானம் வருவார் என்று சொன்னேன், அதையே பிடித்துக் கொண்டான்... பிறந்தநாளன்று அவன் அழ வேண்டாமே என்று நினைத்து தங்கள் கணவரைக் கூப்பிட்டேன். அவரும் வந்தார். ப்ரவீனின் சந்தோஷத்தைப் பார்த்து நான் சந்தோஷப்



இன்று பலருக்கு ஹைபர் டென்சன்? இதனை குறைக்க இதோ எளிய மருத்துவம்.

இளநீர் குடியுங்கள்.. அல்லது எலுமிச்சை சாறை பிழிந்ததும் உடனே குடியுங்கள்! இதன்மூலம் உங்க உடலில் பொட்டாசியம் சத்து கூடும். ஹைபர் டென்சனும் குறைந்து விடும்!

-ராஜிராதா, பெங்களூர்.

பட்டேன்.

ஆனால் நீங்களும் உங்களுடைய அண்ணனும் என் வீட்டு படியேறி வந்து திட்டியபோது ப்ரவீனின் சந்தோஷத்திற்கு குறுக்காய் நான் இருப்பதை உணர்ந்தேன். ப்ரவீனின் சந்தோஷம் என்னால் சிதைந்து போவது என்பது என்னால் ஜீரணிக்க முடியாத ஒன்று. நான் இல்லாமல் போனால்-பிரச்சனை தீர்ந்து விடும் என்பதை உணர்ந்து இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.

ப்ரவீனுக்கு நீங்கள் அம்மா ஸ்தானம் தராவிட்டாலும் பரவாயில்லை... உங்கள் கணவரை டாடி என்று அழைக்க அந்த பிஞ்சு உள்ளத்துக்கு அனுமதி கொடுங்கள். அதற்கும் உங்கள் மனம் சம்மதிக்கவில்லை- என்றால் அவனை ஏதாவது ஒரு அநாதைவிடுதியில்-சேர்த்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என் ப்ரவீனுக்கு சந்தோஷத்தை கொடுங்கள் என்று இருகை கூப்பி கேட்கும்-

சாந்திமதி.

கடிதத்தைப் படிக்க படிக்க கல்பகாவினால் அழுகையை கட்டுப்படுத்தவே முடியவில்லை. அருகிலிருந்த ப்ரவீனை இழுத்து அணைத்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

வார்டின் அறைக்கதவைத் திறந்து கொண்டு டாக்டர் வெளிப்பட்டார்.

"டாக்டர்..."

ஜெக்தீசும் கல்பகாவும் அவரருகே ஓடினார்கள்.

டாக்டர் சொன்னார்.

"பாடியை எடுத்துட்டு போக ஏற்பாடு பண்ணுங்க..."

ஜெக்தீஷ் ஸ்தம்பித்து நிற்க-

கல்பகா அழுது கொண்டு உள்ளே போனாள்.

**முற்றும்**



# தெரிந்துகொள்ளலாமே!

**நவக்கிரகங்களில் பெரிது**

நவக்கிரகங்களில் வியாழன் எல்லாவற்றிலும் பெரிதும். அதன் குறுக்களவு 3030 மைல் நீளம்.

**சந்திரனுடைய வேகம்**



சந்திரன் ஒரு விநாடிக்கு 3330 அடிவீதம் செல்லுகிறதாம்.

**சமயமும் மொழியும்**

உலகம் முழுவதிலும் 1008 மதங்களும் 3065 மொழிகளும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**பீங்கான் பாலம்**

சீனா தேசத்திலுள்ள பெகின் என்னும் இடத்துக்கு அருகே முழுவதும் பீங்கானாலேயே செய்யப்பட்ட ஒரு பாலம் இருக்கிறதாம்.

உப்பில்லாத உணவினாலும் வேறுசில உணவு முறைகளாலும் பல வகை காச நோய்களையும் குணப்படுத்தி விடலாமென்று ஜெர்மன் வைத்தியர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.

**தேங்காய் எண்ணெய்**

'டைபாய்டு' கிருமிகளையும் மற்ற நச்சு நோய்க்கிருமிகளையும் கொல்லிக்கூடிய வலிமை தேங்காய் எண்ணெய்க்கு உண்டாம். -

இரா.பாலகிருஷ்ணன், வரக்கால் பட்டு.

எண்ணெய் பண்டம் அதிகம் சாப்பிட நேரும் சிலருக்கு பருக்கள் தவிர்க்க முடியாதது. கல்யாண முருங்கை இலைகள் பத்து எடுத்து கஷாயம் வைத்து காலை வெறும் வயிற்றில் குடியுங்கள். கொழுப்பை வெளியேற்றி எடையை குறைக்கும் ஆற்றல் இதற்குண்டு.

-மஞ்சுளாகிருஷ்ணன்,
திருவாரூர்.

